விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 301 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (16.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## டிப்பர் - பேருந்து முகமாலையில் விபத்து

### 47 பேர் காயம்



(பளை)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்தில் 47 பேர் காயமடைந் துள்ளனர்.

குறித்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த மனிதா பிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரை ஏற்றி பயணித்த 19

கொடிகாமத்தில்

## ரயில் விபத்து; முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் இடம்பெற்ற ரயில் விபத் தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இவ்விபத்து இடம்பெற் றுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகை யிரத வண்டி மோதியதி லேயே குறித்த வயோதி பர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த சி.சுந் தரம் (வயது-67) 19

ஆயிரம் போதை மாத்திரைகளுடன்

## யாழ்.நகர்ப் பகுதியில் 4 வியாபாரிகள் கைது




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர் பகுதியில் ஆயிரம் போதை மாத்திரை கள் மற்றும் ஒரு தொகை ஹெரோயின் போதைப்பொரு ளுடன் நான்குபோதை வியாபாரிகள் கைது 19

வடக்குக்கு அதிகாரப் பகிர்வு அவசியம்

# புலிகளின் அழிவுக்கு நான் காரணம் அல்ல

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



- காணாமல்போனவர்களுக்கு இலங்கை அரசே பதில் வழங்க வேண்டும்.
- இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தவே விரும்பினேன்.

விடுதலைப் புலிகளை நான் அழித்ததாக தெரிவிக் கப்படுவது சரியானதில்லை எனத் தெரிவித்துள்ள நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், காணாமல்போனவர்கள் குறித்த பதில்களை இலங்கை அரசாங்கம்வழங்க வேண்டும். வடக்கிற்கு அதிகாரப் பகிர்வு 19

## மோ.சைக்கிள் விபத்து; 2½ வயது குழந்தை பலி

### தந்தையுடன் பெற்றோல் தாங்கியில் அமர்ந்து பயணித்தபோது விபரீதம்

(மன்னார்)

தந்தையின் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியிலிருந்து பயணித்த இரண்டரை வயதுக்குழந்தை விபத்தில் சிக்குண்டு பரிதாப மாக உயிரிழந்துள்ளது.

மன்னார் அகத்திமுறிப் பைச்சேர்ந்த அம்ஜட் பாத்திமா அமனா 19

## வவுனியாவில் வீதி விபத்து

### முதியவர் பலி

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் இ.போ.ச பேருந்தும் துவிச்சக்கரவண்டி யும் மோதி விபத்துக்குள்ளான தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே 19

## யாழின் சமகால நிலைமை தொடர்பில் கரு ஜயசூரிய தலைமையில் கலந்துரையாடல்

### வடக்கின் அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்திற் கான கூட்டமைப்பின் ஏற் பாட்டில் யாழ்ப்பாண மாவட் 19



ஆறுகால்மடத்தில்

## கசிப்புடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால் மடம்பகுதியில் 1500 மில்லி லீற்றர் கசிப்புடன் இளைஞன் ஒருவர் 19

## சீரற்ற வானிலையால் மூவர் பலி; 55 ஆயிரம் பேர் பாதிப்பு

### உஷார் நிலையில் 36 கடற்படைக் குழுக்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் மழை யுடன்கூடிய சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 11 மாவட்டங்களில் 13,902 குடும் பங்களைச் சேர்ந்த 55,435 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத் 02

வடமராட்சிப் பகுதியில்

## திருட்டுடன் தொடர்புடையவர் ஹெரோயினுடன் கைது

### நீதிமன்றில் முற்படுத்த முன் பொலிஸிலிருந்து தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் வீடு டைத்து திருட்டு மற்றும் வழிப் பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பலைச் சேர் ந்த ஒருவர் ஹெரோ 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பணியாளர் தேவை

அச்சுவேலி பிரதேச எல்லைக்குள் வீட்டில் தங்கி நின்று வயோதிப பெண்ணை பாரமரிப்பதற்கு நற்பண்பும் தேகாரோக்கியமும் உள்ள பெண் பணியாளர் தேவை.

(13135)

**074 049 1582**



## விரைவில் சிங்களம் பேச...

குறைந்த கட்டணத்தில் 'நான்கு மாதத்தில் சிங்களம் தெளிவாகப் பேசலாம். இன்றே இணையுங்கள்.

தொடர்பு (13133)

**077 065 2181**
**070 403 5735**
zoom



## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு



*அன்புடையீர்!*

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 21ம் நாள் 08.10.2022 சனிக்கிழமை பூர்வபட்ஷ சதுர்த்தசி திதியில் சிவபதம் எய்திய

அமரர் ஸ்ரீமதி
**இலட்சுமிஅம்மா வைத்தியநாதக் குருக்கள்**
(வேவி அம்மா)

தோற்றம் 1939.03.29 — மறைவு 2022.10.08

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் எமது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

திங்கட்கிழமை 17.10.2022 (தசாகம்) மு.ப 11.00 மணி
செவ்வாய்க்கிழமை 18.10.2022 (ஏகோதிட்டம் மாசிகம்) மு.ப 9.30 மணி
புதன்கிழமை 19.10.2022 (சபிண்டீகரணம்) மு.ப 11.30 மணி
அன்றைய தினம் மதியபோசனம் இடம்பெறும்.

மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோவிலடி,
தும்பளை வீதி,
பருத்தித்துறை. (13132)

இங்ஙனம்
கணேசமூர்த்தி சர்மா,
கௌரி குடும்பத்தினர்



## 1ம் ஆண்டு நினைவு நாள்



மண்ணில் 1953 - 08 - 03
விண்ணில் 2021 - 09 - 28

**மாணிக்கம் தனபாலசிங்கம்**
(பெரியண்ணை - ஸ்ரீகிருஸ்ணா பேக்கரி)

அப்பா இதயத்தில் எங்களைச் சுமந்து
காற்றில் கரைந்து விட்டீர்களே!
உங்கள் நினைவும் மறையவில்லை
மறையவும் போவதில்லை.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (C-5097)

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்


## திருட்டுடன்...

யின் போதைப்பொருளுடன் கைது செய் யப்பட்ட நிலையில் நேற்று முற்பகல் பருத்தித்துறை பொலிஸ் காவலில் இருந்து குறித்த நபர் தப்பித்துள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வாளர்கள் முன்னெடுத்த விசாரணைகளின் போது, நேற்று முன் தினம் அல்வாய் பகுதியில் வைத்து 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 3 பவுண் தாலி. 2 பவுண் சங்கிலி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஐ போன் ஒன்றும் கைப்பற்றப் பட்டன. சந்தேகநபரின் உடைமையிலிருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரை நேற்று நண்பகல் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவிருந்த நிலையில் அவர் நேற்று முற்பகல் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பித்துள்ளார்.

மலசலகூடத்தின் யன்னல் இடைவெளி ஊடாக அவர் வெளியேறி தப்பித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7.33)

## சீரற்ற ...

துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மீட்புப் பணிகளை மேற்கொள்ள 36 குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ம-7)


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (13142)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



## நீர்க்கசிவுக்கான இரசாயனப் பொருட்கள்

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

**ஏக விநியோகஸ்த்தர்கள்**

FINEX

உலகத் தரமிக்க இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். (13131)

**North & East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177,
077 232 3000
www.North & East engineering.com



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம் வைத்திலிங்கம் வித்தியாசாலை வடக்கு பக்க எல்லையாக 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் இருந்து 100m தூரம், 2 பக்க பாதை) தரகர் தேவையில்லை.**

(13129)

தொடர்புகளுக்கு

**0041789840202**
சுரேன்
**077 671 0071**
நவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை அபகரித்துக் கொண்டு உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது!

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**விவசாயிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது. இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கட்சி பேதமின்றி கொண்டு செல்ல வேண்டும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**



வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட விவசாயிகளுடன் நேற்று இடம்பெற்ற திறந்த கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசியும் எந்தத் தீர்வும் இல்லை. அதனால் நாங்கள் இது தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. கட்சி விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

ஜனாதிபதியிடம் விவசாயப் பிரச்சினைகளை முன்வைக்க வேண்டும். சில பிரச்சினைகளை ஜனாதிபதி அவர்களால் தான் தீர்க்க முடியும். ஏனெனில் நில அபகரிப்பு தொடர்பாக சில திணைக்களங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது.

விவசாயிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியாது.

இந்த விடயத்தில் கட்சி பேதமின்றி ஜனாதிபதியுடன் பேசி தீர்வு காண வேண்டும். ஒரு காலவரையறைக்குள் தீர்க்க முடியாவிட்டால் மக்களுடன் இணைந்து போராட வேண்டும்.

அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியை தெரிவு செய்வது தமிழ், முஸ்லிம் மக்களின் கைகளிலேயே உள்ளது. தென்னிலங்கை கட்சிகள் பிளவுபட்டுள்ளன.

எமது விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்காது விடின் விவசாயிகளிடம் இருந்து பாடத்தை பெற வேண்டி வரும். நாமும் விவசாயிகளுடன் இணைந்து போராட வேண்டும் என தெரிவித்தார். (4)

## கொத்து ரொட்டியின் விலை குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் மொத்த விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை கருத்திற்கொண்டு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் கொதது ரொட்டியின் விலையைக் குறைத்துள்ளது.

அதன்படி இன்று முதல் கொத்துரொட்டியின் விலை 50 ரூபாவினால் குறைக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் மா அடிப்படையிலான ஏனைய பொருட்களின் விலை குறைக்கப்பட மாட்டாது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது கொத்து ரொட்டி விலையானது ரூபாய் 500 முதல் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது. (4)



## வாக்காளர் பதிவில் பெயர்களை உறுதிப்படுத்தவும்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் பிறநதவர்களின் பெயர்கள் வாக்காளர் பதிவில் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு அந்தந்த கிராம உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களைக் கோரியுள்ளது.

மின்னணு பதிவேட்டில் இல்லாதவர்கள் ஒக்டோபர் 19ஆம் திகதிக்குள் கிராம நிர்வாக உத்தியோகத்தர்களை சந்திக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,பொதுமக்கள் தங்கள் பெயர்கள் உள்ளதா என்பதை அந்தந்த கிராம உத்தியோகத்தரிடம் சரிபார்க்கலாம்.

இதேவேளை தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளமான www.elections.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று மக்கள் தமது பெயர் இருப்பை சரிபார்க்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (4)

### உலகின் சிறந்த விஞ்ஞானிகளின் பட்டியலில்

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலையின் ஆராய்ச்சியாளர்கள் ஐவர் தெரிவு




(கொழும்பு)

அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம் ஐரோப்பிய வெளியீட்டாளர் எல்ஸ்வயர் இணைந்து வெளியிட்ட உலகின்சிறந்த 2 சதவீத விஞ்ஞானிகளின் பட்டியலில் இலங்கை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஐவர் இடம்பிடித்துள்ளனர்.(4)

## நாட்டின் பொருளாதார சீர்திருத்தம்; நாணய நிதியத்துடன் பேச்சு



(கொழும்பு)

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜிஒகாமுராவை வோஷிங்டனில் சந்தித்துள்ளார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் அமுல்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்களில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய அபிவிருத்தி நாடுகளுடன் நெருக்கமாக செயற்படுவதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

வோஷிங்டனில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்த போது உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உபதலைவர் மார்ட்டின் ரைசர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இதற்கிடையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள் பலரை சந்தித்துள்ளனர். (4)

## மோசடிகள் தொடர்பில் அமெ.தூதரகம் எச்சரிக்கை

(கொழும்பு)

மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி மோசடி செய்பவர்களால் விளம்பரப்படுத்தப்படும் பயண காப்பீட்டு சான்றிதழ்கள் அமெரிக்காவிற்கு பயணிக்க தேவையில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் நேற்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

அதில், பயணிகள் மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விசா கட்டணங்கள் உத்தியோகபூர்வ வங்கிகள் அல்லது அமெரிக்க தூதரகத்தின் தூதரக காசாளருக்கு மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

அமெரிக்காவுக்குச் செல்வதற்கான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதற்காக மோசடிகள் இடம்பெறுவதை சுட்டிக்காட்டி அமெரிக்கத் தூதரகம் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தரப்பு இருபது-20

# நியூஸிலாந்தை வீழ்த்தி பாகிஸ்தான் சம்பியன்



முத்தரப்பு இருபது-20 தொடரின் நியூஸிலாந்து அணிக்கெதிரான இறுதிப் போட்டியில், பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கேம் வில்லியம்சன் 59 ஓட்டங்களையும் க்ளென் பிலிப்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், நஷிம் ஷா மற்றும் ஹரிஸ் ரவூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சதாப் கான் மற்றும் நவாஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இதனைத்தொடர்ந்து பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது!

இதனால், பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் நவாஸ் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் மொஹமட் ரிஸ்வான் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மொஹமட் நவாஸ் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக பிரேஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார். (4)

# உலகக் கிண்ண கிரிக்கெட் ஆஸியில் இன்று ஆரம்பம்



8 ஆவது 20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் இன்று ஆரம்பமாகிறது.

நவம்பர் 13 ஆம் திகதி வரை 7 நகரங்களில் நடைபெறும் இந்த போட்டியில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. இதில் முதல் சுற்றில் 8 அணிகள் விளையாடும். அவற்றில் இருந்து 4 அணிகள் சுப்பர் 12 சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் ஆகிய அணிகள் நேரடியாக சுப்பர் 12 சுற்றில் விளையாட உள்ளன. மொத்தம் 45 ஆட்டங்கள் நடைபெற்றன.

நாளைய தினம் கீலாங் ஸ்டேடியத்தில் நடக்கும் முதல் சுற்று ஆட்டங்களில் முன்னாள் சம்பியன் இலங்கை- நமிபியா (இந்திய நேரப்படி காலை 9.30 மணி), நெதர்லாந்து-ஐக்கிய அரபு அமீரகம் (பிற்பகல் 1.30 மணி) அணிகள் மோதுகின்றன. இதையொட்டி போட்டிக்கான ஏற்பாடுகளை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலும் (ஐ.சி.சி), அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியமும் முழுவீச்சில் செய்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக நடக்கும் இந்தப் போட்டியை காண ரசிகர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். இது குறித்து ஐ.சி.சி உலகக் கிண்ணப் போட்டிக்கான தலைமை நிர்வாகி மிட்செல் என்ரைட் கூறுகையில், "உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் 20 ஓவர் உலகக் கிண்ண போட்டியும் ஒன்று. இந்த போட்டிக்காக இதுவரை 6 இலட்சத்திற்கும் அதிகமான டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளன.

இதில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி மெல்பேர்னில் மோதும் ஆட்டத்திற்கான டிக்கெட்டுகள் முழுமையாக விற்றுத் தீர்ந்து விட்டன என தெரிவித்தார். (4)

### உலகக் கிண்ணம்

# இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளில் மாற்றம்

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்காக சர்வதேச அணிகள் தயாராகி வரும் நிலையில், தற்போது இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளில் சில மாற்றங் கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இதில் இந்திய அணி யில் உபாதை காரணமாக அணியிலிருந்து வெளியேறிய முன்னணி வேகப் பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ராவுக்குப் பதிலாக, மொஹமட் ஷமி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அதேபோல பாகிஸ்தான் அணியில், காயத்தில் இருந்து போதுமான அளவு மீளத் தவறிய உஸ்மான் காதிருக்குப் பதிலாக காத்திருப்புப் பட்டியலில் இருந்த ஃபகஹர்ஸமானை 15 பேர் கொண்ட அணியில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இணைத்துள்ளது.

உலகக்கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட பங்களாதேஷ் அணியில் சௌமியா சர்க்கார் மற்றும் ஷோரிபுல் இஸ்லாம் ஆகியோரை பங்களாதேஷ் சேர்த்துள்ளது.

சபீர் ரஹ்மான் மற்றும் முகமது சைஃபுதீன் ஆகியோரின் செயற்றிறனில் அணி நிர்வாகம் மகிழ்ச்சியடையாததால் இருவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். (4)

# லங்கா பிறீமியர் லீக் டிசெம்பர் 6 இல் ஆரம்பம்



ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3 ஆவது லங்கா பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி டிசெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

நடப்பு சம்பியன் ஜப்னா கிங்ஸ், கலம்போ ஸ்டார்ஸ், கண்டி ஃபெல்கன்ஸ், காலி க்ளடியேட்டர்ஸ், தம்புள்ள ஜயன்ட்ஸ் ஆகிய 5 அணிகள் பங்குபற்றுகின்றன.

இவ்வருடம் லங்கா பிறீ மியர் லீக் போட்டிகள் அம்பாந்தோட்டை, மகிந்தராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு, கண்டி, பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு, கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு ஆகிய 3 மைதானங்களில் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு அணியும் ஒன்றையொன்று இரண்டு தடவைகள் சந்திப்பதுடன் மொத்தம் 20 லீக் போட்டிகள் நடைபெறும். இறுதிச் சுற்றில் 4 போட்டிகள் நடைபெறும்.

லீக் சுற்றுப் போட்டிகள் டிசெம்பர் 6ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 19ஆம் திகதி வரை இரண்டு கட்டங்களாக நடத்தப்படும்.

டிசெம்பர் 21 ஆம் திகதி முதலாவது தகுதிகாண் (அரை இறுதி) போட்டியும் நீக்கல் போட்டியும் 22ஆம் திகதி 2ஆவது தகுதிகாண் (அரை இறுதி) போட்டியும் நடைபெறவுள்ளன.

இறுதிப் போட்டி டிசெம்பர் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (4)


## விற்பனைக்கு

- KDh 200 வான் விற்பனைக்கு உண்டு.(2007)
- 08 சிறி XXXX பொக்ஸ் செக்கன் கார் விற்பனைக்கு உண்டு.
- மின்சார மோட்டார் நீர் இறைக்கும் இயந்திரம் (நீரில் இருந்து இறைக்கும் இயந்திரம்)

விற்பனைக்குண்டு.

**077 773 0567**

## விற்பனைக்கு

யாழ்.மருத்துவபீடத்துக்கு முன்பாக 6 பரப்பு காணியும், யாழ். கஸ்தூரியார் வீதியில் 30 அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 2 கடையும், யாழ். கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 1 பரப்பு 3 குழியில் அமைந்த வீடும் காணியும், யாழ். கே.கே.எஸ் வீதியில் கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக 3 கடைகளும், யாழ். கே.கே.எஸ் வீதியில் சிவலிங்கப்புளியடிக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 89 முருகமூர்த்தி வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அழகிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.

**கீழ்த்தளம் :** 3 அறை, கோல், சமையலறை, வாகனத் தரிப்பிடம் மலசலகூடம் (Attach)

**1 ஆம் தளம் :** 5 அறை, 2 கோல், மலசலகூடம் (Attach) (உள்வெளி ஏறு படி)

அரச உத்தியோகத்தர் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

அதிகூடிய வாகனத் தரிப்பிடம்.

(13143)

**074 373 0894, 077 388 4719**

## வாடகைக்கு

இராசபாதை வீதியில் சுற்று மதில்களுடன் பண்ணை வாடகைக்கு உண்டு.

(13146)

**077 773 0567**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த

# அனைத்து விளைநிலங்களிலும் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்குக

## ஜனாதிபதி ரணில்



**(கொழும்பு)**

**நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு அனைத்து விளை நிலங்களிலும் பயிர்ச்செய் கையை முன்னெடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத் தியுள்ளார்.**

திருகோணமலை மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அலு வலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே ஜனாதி பதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாரம்பரியமாக விவசாயம் செய்யப்பட்டு வந்த அநேகமான விளைநிலங்கள் போரினால் கைவிடப்பட்டு, பின்னர் வன ஜீவராசிகள் மற்றும் வனவள பிரதேசமாக எல்லையிடப்பட் டுள்ளன.

அவ்வாறான பாரம்பரிய காணிகளை மீள விவசாயி களுக்கு வழங்குவது தொடர் பிலும் இந்தக் கூட்டத்தில் விரி வாக ஆராயப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பிரச்சினை களை விரைவாக தீர்க்க வேண் டியதன் அவசியத்தை வலி யுறுத்திய ஜனாதிபதி எதிர்வ ரும் போகத்தை சிறந்த முறை யில் முன்னெடுப்பதன் மூலம் 2023 இல் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைச் சமா ளிக்கத் தயாராக வேண்டியதன் அவசியத்தையும் விளக்கி யுள்ளார். (4)

# பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியாது

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பாண் மற்றும் பேக்கரி உற் பத்திப் பொருட்களின் விலை குறைப்பு தொடர்பில் அறிவிப் பொன்று வெளியாகியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை 290 ரூபாவாக குறைக்கப்பட்டுள் ளது.

எனினும் பாண், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடி யாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்தன தெரிவித்துள் ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள பேக்கரிகளுக் கான 50 சதவீத கோதுமை மா விநியோகத்தை இரண்டு பிர தான நிறுவனங்கள் செய்கின் றன.

அவர்கள் விலையை 250 ரூபாயாக குறைத்தால் மாத் திரமே பாண் விலை குறையும் என தெரிவித்தார். (4)

# சீனத் தூதுவரை சந்தித்த மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவிற்கும் இலங் கைக்கான சீன தூதுவருக்கும் இடையில்விசேட சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கைக் கும் சீனாவிற்கும் இடையி லான நல்லுறவை வலுப்படுத்து வது தொர்டர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

மேலும் தற்போது பொரு ளாதார நெருக்கடியை எதிர் நோக்கி வருவதாகவும் ஆனால் நாடு விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என தான் நம்புவதாகவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் முன்னாள் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை எதிர் நோக்கியுள்ள பொருளாதார சவால்களை வெற்றி கொள் வதற்கு சீனா உதவிகளை வழங்குவதோடு சீன சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு விஜ யம் மேற்கொள்வார்கள் என வும் இலங்கைக்கான சீனத் தூதுவர் இதன்போது உறுதி யளித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# மென்பொருள் ஊடான 1,500 கோடி ரூபாய் மோசடி

## சீனத் தம்பதியினர் கைது

(கொழும்பு)

'ஸ்போர்ட்ஸ் சைன்' எனும் மென்பொருளை உருவாக்கி, அதனுடன் தொடர்புபட்டவர் களிடம் 1500 கோடி ரூபாய் வரை பணமோசடி செய்யப் பட்டுள்ளதாக கூறப்படும் விவகாரத்தில் தொடர்புபட் டுள்ளதாகக் கூறப்படும் சீன தம்பதியினர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக மலேசியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது கைது செய் யப்பட்டுள்ளனர்.

சி.ஐ.டியின் சிறப்புக் குழு வினர் அவர்களைக் கைது செய்து கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குண வல முன்னிலையில் ஆஜர் செய்த போது அவர்களை எதிர் வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டு ள்ளார்.

குறித்த தம்பதியினரின் வங்கிக் கணக்குகளில் சுமார் 1.4 பில்லியன் ரூபாய் பரிமாற் றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அவை எவ்வாறு அவ்வங்கிக் கணக்குகளுக்கு கிடைத்தன, அங்கிருந்து யாருக்கெல்லாம் பரிமாற்றப்பட்டன என்பது தொடர் பில் விசாரணைகள் இடம் பெறு வதாக சி.ஐ.டியினர் தெரிவித் தனர். (4)

# இராசிபலன்

16.10.2022
புரட்டாதி 29, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி காலை 7.23 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 3.03 மணிவரை
சுபநேரம்-9.02-10.32 மணிவரை
இராகு காலம்- 4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்- கேட்டை

**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாயப்புண்டு, காரிய அனுகூல முண்டு.




தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு ஆனந்தம் தரும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ரோக பயமுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சிக்கல்கல் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.




உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், உடல் நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




பொதுவாழ்வில் புகழ் கூடும், உறவினர்கள் மத்தியில் நன்மைகள் இடம்பெறலாம், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், திருடர் பயமுண்டு.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், இனிமையான நாள்.




இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்கள் இடம்பெறலாம்.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர்.

உன் மனதிற்கு ஓய்வு கொடு, அது அமைதியில் வளரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகத்தில் விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் விழிப்புணர்வு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.**




சுன்னாகம் நகரில் நேற்று காலை 9மணியளவில் ஆரம்பமான பேரணி சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையம் வழியாக வாழ்வகத்தை சென்றடைந்தது.

வாழ்வகம் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இந்த விழிப்புணர்வுப் பேரணியை நடத்தின.

வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவம், விழிப்புலனற்றவர்கள் வீதியில் நடமாடுவதற்கு இருக்கின்ற இடையூறுகள், அவர்களை ஏன் முன்னுரிமைப்படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் இதன் போதுவலியுறுத்தப்பட்டது. (4-33)

# வட்டுக்கோட்டையில் மதுவரி நிலையத்தினரால் கசிப்பு மீட்பு

## ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பகுதியில் நேற்று முன்தினம் 500 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சித்தங்கேணி மதுவரி நிலையத்தினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கசிப்பினை வைத்திருந்த சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

சந்தேகநபர் வேறு பகுதியில் இருந்து கொள்வனவு செய்யப்படும் கசிப்பினை அராலி பகுதியில் விற்பனை செய்து வந்துள்ளார். இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிராமவாசிகள் பலதடவைகள் இரகசிய தகவல் வழங்கியும் கசிப்பு விற்பனையாளர்களை கைது செய்வதில் பொலிஸார் பின்னடித்து வந்ததாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்..

இந்நிலையில் சித்தங்கேணி மதுவரி நிலையத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து மதுவரி நிலையத்தினர் குறித்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-104)

# வடமராட்சியில் தொடர் திருட்டில் ஈடுபட்டவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் வீடு உடைத்து திருட்டு மற்றும் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வாளர்கள் முன்னெடுத்த விசாரணைகளின் போது, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அல்வாய் பகுதியில் வைத்து 23 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3 பவுண் தாலி, 2 பவுண் சங்கிலி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஐ போன் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரின் உடைமையிலிருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

இந்தக் கும்பலைச் சேர்ந்த மற்றவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(4-33-60)


## 30 வருடங்களின் பின்னர்

# நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கத்தினருக்கு தரிப்பிட வசதி

(கரணவாய்)

30 வருடங்களின் பின்னர் நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கத்தினருக்கு நிரந்தர முச்சக்கரவண்டி தரிப்பிடம் நேற்று ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதனின் முயற்சியால் இது ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



25 முச்சக்கரவண்டிகள் நிறுத்தக்கூடிய வசதியில் குறித்த தரிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (4-60)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க புனரமைப்பு கூட்டமானது எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணியளவில் திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றத்தில் (வை.எம்.எச்.ஏ) நடைபெறவுள்ளது.

பரமேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (4)

# அப்துல் கலாமின் 91 ஆவது பிறந்ததின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் 91 ஆவது பிறந்ததின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழிற்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (4-33)

# வீதி சீரின்மையால் பேருந்து சேவை தடைப்படும் அபாயம்

## மறவன் புலவு கிராம மக்கள் கவலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மறவன் புலவு கிராமத்தில் மில்டரி வீதி தொடக்கம் மணற்காட்டு வீதி வரையான இணைப்பு வீதி கடுமையாக சேதமடைந்திருப்பதால் கிராமத்திற்கான பேருந்து சேவை தடைப்படும் அபாயநிலை காணப்படுவதாக கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இது தொடர்பாக கிராம மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

மில்டரி வீதி தொடக்கம் மணற்காட்டு வீதி வரையான கிராமத்தின் பிரதான வீதியின் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையான தூரம் கடுமையாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் எமது கிராமத்திற்கான சேவையில் ஈடுபடும் ஒரே ஒரு அரச பேருந்து சேவை கூட தடைப்படும் அபாய நிலை காணப்படுகிறது.

மறவன் புலவு கிராமத்தில் கடந்த 11 வருடங்களுக்கு முன்னர் வடக்கின் வசந்தம் திட்டத்தில் பறிக்கப்பட்ட பெருமளவான கற்கள் இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் தனியார் காணிகளில் ஆங்காங்கே குவிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

எனவே சாவகச்சேரிப் பிரதேசசபை குறித்த கற்களைப் பயன்படுத்தி கிராமத்திற்கான பிரதான வீதியை செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-30)



2020/ 2021 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறப்பு நிலைகள் பெற்ற மாணவர்களுக்கு கடந்த 13 ஆம் திகதி கொமர்ஷல் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் திருமதி. துஷ்யந்தினி குருபரராஜா தலைமையில் சிறப்பு சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 365

Viber 076 636 3378



# தமிழினத்தின் பிரச்சினை தீராத வரை இலங்கை அமைதி பெறாது

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் நீங்கி அதள பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரம் மீண்டெள வேண்டும் எனின் தமிழினத்திற்கு நிரந்தரத் தீர்வு வழங்கினால் மாத்திரமே அது நடைபெறும்.

அவ்வாறு இல்லாமல் இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற மனப்போக்கில் ஒரு இனத்தை உயர்த்தி மற்றைய இனங்களை தாழ்த்தி, வீழ்த்த நினைத்தால் அது இன்னமும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டையே வளர்க்கும்.

> **“ இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை உண்டாக்கி அந்த நெருப்பின் வெம்மையில் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் உள்ளவரை இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பில்லை. ”**

எமது நாட்டின் அரசியல் தலைவர்கள் விட்ட பெரும் தவறும் அதுவே.

தமது அரசியல் சுய இலாபத்திற்காக ஒன்றை இரண்டாக்கி இரண்டை நான்காக்கி நான்கை நாற்பதாக்கிய அவர்களின் சாதனையின் பலனே இன்றைய இந்த நெருக்கடி நிலைக்கு மூல காரணமாகிறது.

பயங்கரவாதத்தை அழித்த ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் கடவுளாகக் கருதினர்.

ஆயினும் ராஜபக்ஷக்களின் வடிவத்தை உணர்ந்து கொண்ட சிங்கள மக்கள் அவர்களை வெறுத்தொதுக்கினர். இனி நீங்கள் எங்களுக்கு வேண்டாம் என ஒன்றுசேர்ந்து ஒருமித்து எதிர்த்து அவர்களை வீட்டுக்கு அனுப்பினர்.

நிலை இதுவாக இருக்கையில் யாரும் எதிர்பார்க்காத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானார். அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்விக்குள் அடங்கியிராத ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும் ராஜபக்ஷ அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்களை தேடித் தேடி கைது செய்ததும் பொதுஜனப் பெரமுன கட்சியின் தயவில் பாராளுமன்றில் நடந்த பொதுவாக்கெடுப்பில் ஜனாதிபதியானதும் சகலரும் அறிந்த விடயமே.

இதன் விளைவு ஜனாதிபதியை ரணில் ராஜபக்ஷ என விமர்சித்தது எதிர்க்கட்சி.

அத்துடன் குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் இருந்திருந்தால் மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பேன்.நான் மக்களின் ஆணையுடனேயே பதவிக்கு வர விரும்புகின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார்.

அரசியல் நெருக்கடி நிலையுடன் பொருளாதாரச் சிக்கலும் இலங்கையின் கழுத்தை நெருக்கத் தொடங்கியுள்ள இவ்வேளையில் அரசியல் தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். ஆனால் அரசியல்வாதிகளின் நிலை அவ்வாறு இல்லை.

நகரும் ஆட்சியை எப்படி கவிழ்ப்பது. தாம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என மந்திராலோசனை நடத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.


இதைவிட தமிழினத்திற்கு எதிரான செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்ட வண்ணமே உள்ளனர்.

குருந்தூர் மலை மற்றும் திருக்கோணேச்சர நில ஆக்கிரமிப்பு ஆகியன இதற்கு தக்க சான்றாக அமைந்துள்ளன.

தமிழினத்தின் இருப்பை இல்லாதொழித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக பிரகடனப்படுத்துவதற்கு தீவிரம் காட்டி வருகின்றனர்.

பொதுஜனப் பெரமுன கட்சியின் எழுச்சியைப் போல வேறெந்தக் கட்சியின் எழுச்சியும் இருந்ததில்லை.

அந்தளவிற்கு பொதுஜனப் பெரமுன கட்சியின் எழுச்சி அமைந்திருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உச்சம் பெற்றிருக்கும் போது ஒரு புதிய கட்சியை உருவாக்கி மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் மிகப் பலம் வாய்ந்த கட்சியாக பொதுஜனப் பெரமுனக் கட்சி எழுச்சியடைந்திருந்தது.



இனி இலங்கையில் பெரமுன ஆட்சியை யாராலும் கவிழ்க்க முடியாது. ராஜபக்ஷக்களின் ஆட்சியை எதுவும் செய்து விட முடியாது என்ற காட்டாப்பு பெரமுன கட்சியினரிடம் இருக்கவே செய்தது.

அத்துடன் பயங்கரவாதத்தை அழித்த ராஜபக்ஷ அரசு போர்க்குற்ற மீறல்களைப் புரிந்ததாக ஐ.நா வின் பலமான எதிர்ப்புக்கள், தீர்மானங்கள் நிறைவேறியதும் அவர்களின் பலத்திற்கு காரணமாக அமைந்திருந்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சிங்கள மக்கள் தாம் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பதற்கு ராஜபக்ஷக்களே காரணம் என பூரணமாக நம்பினர்.

அவர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த இடமளியோம் என அவர்களுக்கு ஆதரவுக் குரல் எழுப்பினர்.

எனினும் கால ஓட்டம் அவ் அனைத்தையும் மாற்றிவிட்டது என்பதே உண்மையானது.

யாரை கதாநாயகர்கள் என புகழ்ந்தனரோ அவர்கள் இனி பதவியில் இருக்க வேண்டாம் என இகழவும் செய்தனர் சிங்கள மக்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொதுஜனப் பெரமுன கட்சியினர் மீண்டும் எழுவோம் எனும் தொனிப்பொருளில் மக்கள் சந்திப்புடன் கூடிய பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த உள்ளிட்ட பொதுஜனப் பெரமுனவின் முக்கியஸ்தர்கள் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களில் எரிந்து நாசமாய்ப் போன வீடுகளின் சாம்பல்களில் இருந்து பீனிக்ஸ் பறவைபோல மகிந்த ராஜபக்ஷ மீண்டெழுவார்.

பல்லாயிரம் மக்களின் ஆதரவுடன் மீண்டும் மகிந்தவை ஜனாதிபதியாக்குவோம் என்று அக் கூட்டத்தில் சூளுரைக்கப்பட்டது.

குறிப்பிட்ட நிகழ்வில் ராஜபக்ஷ அரசிற்கு எதிராக சூழ்ச்சி செய்தவர்களையும் கடுமையாகச் சாடியிருந்தனர்.

பொருளாதார ரீதியில் நாடு மிக மோசமான நிலையில் உள்ளது.தொடர்ந்து வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலையிலேயே உள்ளது.

தமிழினத்திற்கு வழங்க வேண்டிய தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை.இதில் அதிகுறைந்தபட்ச அரசியல் கைதிகளின் விடுதலைகூட இன்னமும் சாத்தியப் படாமல் இருக்கிறது.

இவற்றைத் தவிர்த்து மீண்டும் ஆட்சியமைக்கும் திட்டத்திலேயே அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள்.

இது ஓர் ஆரோக்கியமான விடயமல்ல. தொடர்ந்து தமிழினத்திற்கான நீதி மறுக்கப்படுவதும் இலங்கை அரசுக்கு ஐ.நா அவகாசம் வழங்குவதும் நடந்து கொண்டே இருக்குமாயின் அதனால் பயனேதும் ஆகிவிடப் போவதில்லை.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கவிஞர் முருகையன் அவர்களின் மகன் நாவலன் கொழும்பில் காலமாகிவிட்ட செய்தி அறிந்து மனவேதனைப்படுகிறோம். நாவலன் ஒரு நல்ல கவிஞன். கால சூழல்கள் அவனின் கவித்துவத்திற்கும் ஆற்றலுக்கும் களம் அமைக்கத் தவறி விட்டது. நாவலனின் மறைவுக்கு எமது அஞ்சலி என்று கூற, அனைவரும் எழுந்து நின்று இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின்ர பிரச்சினை 4 ஆம் மாடிக்குப் போயிற்றுதாம்.

**கங்காணி:** என்ன 4 ஆம் மாடிக்கோ! ஏக்கத்தோடு கங்காணி கார்த்திகேயன் கேட்டார்.

**விதானையார்:** ஒரு விரிவுரையாளற்ற சம்பளக் கொடுப்பனவு தொடர்பில இன்னொரு விரிவுரையாளர் பெட்டிசன் போட்டால், அது தொடர்பான விசாரணை 4 ஆம் மாடியில தானே நடக்கும்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் படிப்பித்த ஆசிரியரை 4 ஆம் மாடியில கொண்டு போய் விடுகிற குருலிங்க வழிபாடு எங்களிட்டத்தான் இருக்கு. இவ்வாறு பண்டிதர் கூறும் போது வாத்தியார் வைத்திலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன வாத்தியார் ஒரு மாதிரியா இருக்கிறியள். என்ன சங்கதி.

**வாத்தியார்:** இல்ல இப்ப எங்கட மாணவர்களில பெரும்பாலானவர்கள் ஏ.எல் படிப்பில கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளைத்தான் தெரிந்தெடுக்கினம். அதேநேரம் அந்தப் பிள்ளையள் கடுமையாகவும் படிக்கினம். ஆனால் ஏ.எல் றிசல்ட் மற்சிலும் பயோவிலும் படானாத்தான் இருக்குது. ஓ.எல்லில ஒன்பது ஏ எடுத்த பிள்ளையள் ஏ.எல்லில குண்டு போட்டால் எப்படி இருக்கும்.

**சாத்திரியார்:** கடுமையாப் படிச்சும் ஏன் அந்தப் பிள்ளைகளால இலக்கை அடைய முடியவில்லை.

**பண்டிதர்:** வாத்தியார் பதில் அளிக்க முற்படும் போது இடையில் குறுக்கிட்ட பண்டிதர் எங்கட பிள்ளைகளுக்கு பரீட்சை அமைப்புகளில ஏற்படுகின்ற மாற்றங்கள் தெரியாது.

சோதனை முடியத்தான் அந்தப் பாடம் கஷ்டம்-இந்தப் பாடத்தில நாங்கள் படிச்சது வரல்ல எண்டு மாணவர்கள் கவலைப்படுகினம். ஆனால் தென் பகுதியில உள்ள சிங்களப் பேராசிரியர்களும் முஸ்லிம் பேராசிரியர்களும் தங்கட ஏ.எல் பிள்ளைகளுக்கு கருத்தரங்கு வைச்சு எப்படியான கேள்விகள் வரும் எந்த அமைப்பில படிக்க வேணும் எண்டதைச் சொல்லிக் குடுக்கினம்.

**சிறாப்பர்:** ஏன் வாத்தியார் எங்கட் மாணவர்களுக்கு எங்கட பேராசிரியர்களும் கருத்தரங்கு வைக்கலாம்தானே.

**வாத்தியார்:** ஒருத்தருக்கு ஒருத்தர் எதிராகக் கடிதம் எழுதிறத்திற்கும் பெட்டிசன் அடிக்கிறதிற்கும் நேரம் போதாது. இந்த நிலையில எங்கட மாணவர்களுக்கு ஏ.எல் பரீட்சையில எப்படியான வினாக்கள் வரும் எண்டதைச் சொல்லிக் குடுக்க இஞ்ச ஆரு இருக்கினம்.

**சிறாப்பர்:** அப்ப பேராசிரியர்கள் மலிந்த எங்கட பல்கலைக்கழகத்தில கழுத்தறுப்புப் போட்டியைத் தவிர, எங்கட மக்கள் சமூகத்தை நல்லாக்கிற சிந்தனை இல்லை எண்டது தான் உண்மை.

**சாத்திரியார்:** இராமநாதன் நுண்கலைத் துறையும் இப்ப பீடமாக மாறியிருப்பதால, அங்கயும் ஏட்டி போட்டி நடக்கும் கவனமாக இருக்க வேணும்.

**சிறாப்பர்:** சாத்திரியார் கெட்டிக்காரன் தான். அவரிட்ட சோதிட ஞானம் இருக்கத்தான் செய்யுது.

**மூப்பர்:** ஏன்? சிறாப்பர் அப்படிச் சொல்லுறியள்.

**சிறாப்பர்:** இராமநாதன் நுண்கலைப் பீடத்தில பீடாதிபதி தெரிவில பல வியூகங்கள் அமைக்கப்பட்டதாம். இருந்தும் அந்த வியூகங்கள் வெற்றி பெறவில்லை எண்டு கதைக்கினம்.

**பண்டிதர்:** அப்ப சரிதான். வியூகம் தோற்ற இடத்தில இருந்து பிரச்சினை ஆரம்பமாகும் எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** அது சரி இலங்கையின்ர காலநிலை ஆலோசகராக விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருக்கிறாராம். கால மாற்றம் பற்றி இஞ்ச இருக்கிற ஒருத்தருக்கும் ஒண்டும் தெரியாதோ.

**சாத்திரியார்:** நீங்கள் வானிலை அவதானிப்பை காலநிலை மாற்றம் எண்டு நினைக்கிறியள். ஆனால் என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதி ரணில். விக்கிரமசிங்கவின்ர அரசியல் காலநிலையை அறிந்து சொல்லுறதுக்காகத் தான் ஜனாதிபதி ரணில் எரிக் சொல்ஹெய்மை நியமித்திருக்கிறார்.

**பண்டிதர்:** அப்ப மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு சுப்பிரமணிய சுவாமி எண்டால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு எரிக் சொல்ஹெய்ம் எண்டு சொல்லுறியள்.

**கங்காணி:** அதுசரி வடபகுதியில பொலிஸ் பயிற்சி நிலையம் அமையுமெண்டு வடக்கு ஆளுநர் கூறியிருக்கிறார்.

அப்படியெண்டால், வடபகுதியில பொலிஸ் சேவைக்கு ஆட்களை எடுத்து அவர்களுக்குப் பயிற்சி வழங்கப் போகினமோ.

**விதானையார்:** சீச்சி ...வடபகுதி இளைஞர்களைப் பொலிஸ் சேவையில சேர்க்கிறதுக்கு அரசாங்கம் தயாரில்லை. நான் நினைக்கிறன் இப்ப வடக்கில தானே போதைப் பொருள் விற்பனை, கசிப்பு உற்பத்தி, வாள் வெட்டு, வீடு நுழைந்து கொள்ளையிடுதல் என எல்லாச் சீரழிவும் நடக்குது.

அப்ப வடபகுதியில பொலிஸ் பயிற்சி நிலையம் அமைத்தால், எல்லாத்தையும் ஒரே இடத்தில கற்றுக் கொள்ளலாமல்லோ.

**மூப்பர்:** அப்ப அதுக்கேற்ற மாதிரித்தானோ வடபகுதியை ஆக்கி வைச்சிருக்கினம்.

**பண்டிதர்:** ஓ! இப்ப இருக்கிற எங்கட ஆளுநர் அலுவலகத்திற்கு; திறமையானவர்கள், சிறந்த நிர்வாகிகளைப் பிடிக்காது.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சிலரை வடக்கு ஆளுநர் கொழும்புக்கு விடுவித்திருந்தார். அதில, வடமாகாணத்தில நான்கு ஆளுநர்களுக்கு செயலாளராக இருந்த எல். இளங்கோவனும் ஒருவர்.

அவரை இப்ப ஜனாதிபதியின்ர மேலதிக செயலாளராக நியமித்திருக்கினம் எண்டால் பாருங்களன்.

திறமையானவர்களை வடக்கு ஆளுநர் வேண்டாம் எண்டு அனுப்ப, அங்க ஜனாதிபதி செயலகம் தங்களுக்கு வேணும் எண்டு எடுக்கினம்.


இதில இருந்து தெரியுதுதானே! எங்கட வடக்கில நடக்கிற நிர்வாகம் எப்படி எண்டு. இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## மகிந்தவுக்கு-சுப்பிரமணிய சுவாமி ரணிலுக்கு-எரிக் சொல்ஹெய்ம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



அழிவுகளை ஏற்படுத்தும் ஏவுகணை களை வைத்துக் கொண்டு சமாதா னம் பேசும் வல்லரசுகளை என்ன வென்று சொல்ல?

**தமிழ் யாழ்ப்பாணம்**

**மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனா திபதியாக்குவோம் என பெரமுனவினர் சபதமிட்டிருக்கின்றனரே. அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இது பற்றி யாம் எதைக் கூறிவிடமுடியும். அவர்களை கதாநாயகர்கள் என்று போற் றிப் புகழ்ந்தவர்களே நீங்கள் எங்களுக்கு வேண்டாம். வீடு செல்லுங்கள் என்று கூற, அதை கவனிக்காமல் அவர்கள் இருக்க மக்கள் அவர்களைத் துரத்தியடித்தனரே.
இப்போது மீண்டும் ராஜபக்ஷக்களைக் கொண்டுவர அவர்களின் சகாக்கள் சபத மிட்டிருக்கின்றார்கள்.
பொறுத்திருந்து பார்ப்போம் சிங்கள மக் கள் ராஜபக்ஷக்களை ஏற்கின்றனரா என்று.

**மதுவன் மீசாலை**

**மனிதனை உயர்ந்த இடத்தில் வைப் பது கல்வியா செல்வமா?**

கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல் லாம் சிறப்பு என்கிறார்கள்.
அதே பழமொழியைக் கூறியவர்கள் தான் பணம் பாதாளம் வரை பாயும் என்றார்கள்.செல்வம் சேருவதும் தெரியாது அழிவதும் தெரியாது.ஆனால் கல்வி அவ்வாறில்லை.
சேர்ந்து விட்டால் அதற்கு அழிவே இல்லை. மனித தேகம் மறைந்தாலும் கல்விக்கு மறைவென்பதே இல்லை.
செல்வத்தால் சண்டை, பிரச்சினைகள் ஏற்படும். கல்வியால் சண்டை பிரச்சி னைகள் தீரும்.

**சிவம் வதிரி**

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாலம் அமைத்தால் அதனால் பயன் யாருக்கு வியாசரே?**

பட்டிமன்றத்தில் ஒருவர் பேசும் போது ''அன்று இராமர் இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையில் பாலம் போடும்போது அதை இன்னும் கொஞ்சம் ஸ்ரோங்காகப் போட்டிருந்தால் இன்று நாம் ஒன்றாக இருந்திருப்போம் '' என்று பேசினார்.
உண்மையில் அப்படி ஒரு விடயம் சாத்தி யப்படுமாக இருந்தால் அது இரு நாட்டு க்கும் நன்மை தரும்.
இதில் அதிக நன்மை பெறுபவர்கள் போதை வியாபாரிகளாகத் தான் இருப்பார்கள். கேரளக் கஞ்சாவுக்கு பஞ்சம் இருக்காது.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**இதழினி புலோலி**

**பெரியோர்கள் கூறுவது போல காலம் எதற்கும் பதில் தரவில் லையே. காலம் கடந்து போகிற தாயே அமைகிறது?**

ஒரு திரைப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கூறுவார்.
“ கடிகாரம் ஒரே மாதிரி ஓடும்.காலம் ஒரே மாதிரி ஓடாது '' என்று அது தான் வாழ்வின் தத்துவம்.
எமக்கு காலம் அதிகம் கடந்துவிட்டது என்பது போல இருக்குமே தவிர குறித்த காலத்தில் எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும்.
தமிழினத்திற்கு நீதி கிடைக்கவில்லை என்று புலம்புகிறோம்.
காலம் கடந்து விட்டதாய் அலட்டிக் கொள்கின்றோம்.
ஒரு நாளும் இல்லை.
காலம் தன் வேலைகளைச் செய்தே தீரும். எது நடக்க வேண்டுமோ அது நட ந்தே தீரும்.



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாலம் அமைத்தால் அதனால் பயன் யாருக்கு வியாசரே?

**தெய்வேந்திரன் நல்லூர்**

**தமிழ், தமிழர் என்று பேசுபவர்கள் தமிழை அழிக்கும் செயலில் ஈடுபடு கிறார்களே?**

இது தான் இன்றைய நிலை. ஊருக்கு உபதேசம் செய்பவர்கள் இருக்கும் வரை எதுவும் நடக்காது.
தமிழர் பூர்வீக நிலங்கள் பேரினவாத அரசினால் கபளீகரம் செய்யப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அறிக்கை விடுகிறார்கள்.
அவர்களின் பெயருக்குப் பக்கத்தில் தேசப் பந்து, தேசாபிமானி என்ற பட்டங்கள் குவிந்து கிடக்கின்றன.
இதற்கு எம் அரசியல்வாதிகளே காரணம். பாராளுமன்ற சலுகைகளைப் பெறு கிறார்கள் அங்கு. அரசை எதிர்க்கின்றார் கள் இங்கு.

**சர்ச்சி யாழ்ப்பாணம்**

**அன்பு என்பது கசப்பானதா இல்லை இனிப்பானதா வியாசரே?**

அன்பு இருவகைப்படும். ஒன்று கரும்பை நுனியில் இருந்து அடிநோக்கிக் கடிப்பது. ஆரம்பத்தில் கசக்கும் பிறகு இனிக்கும்.
மற்றையது அடியில் இருந்து நுனிநோ க்கிக் கடிப்பது. ஆரம்பத்தில் இனிக்கும் பிறகு கசக்கத் தொடங்கிவிடும்.
இதில் அடியில் இருந்து நுனிநோக்கிக் கடிப்பதிலேயே பலர் கவனம் செலுத்து கின்றனர்.
அது ஆரம்பத்தில் தித்தித்தாலும் பின்னர் கசக்கவே செய்கிறது.

**தாரா வதிரி**

**அழிவுகளை ஏற்படுத்தும் ஏவுகணை களை வைத்துக் கொண்டு சமாதா னம் பேசும் வல்லரசுகளை என்ன வென்று சொல்ல?**

வல்லரசுகள் தாங்கள் தான் இந்த உல கின் வல்லவர்கள் என்று நினைக்கிறா ர்கள்.
தங்களுக்கு எதிராகவோ தங்களை மிஞ் சவோ ஆள் இருக்கக்கூடாது என்பதில் மிகத் தீவிரமாக இருக்கின்றார்கள்.
எங்களுக்குள் அணு ஆயுதப் போட்டி இருக்கலாமே தவிர இனி யாரும் அதை உற்பத்தி செய்யக் கூடாது என்று சட்டம் போட்டு வெருட்டுகிறார்கள்.
இவை எந்த வகையிலும் அறம் அல்லவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: சிந்து பைரவி**
**இயற்றியவர்: வாலி**
**இசை: இளையராஜா**
**பாடியவர்: கே.எஸ்.சித்திரா**



நான் ஒருசிந்து காவடிச்சிந்து
நான் ஒரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள
சோகம் தெரியவில்ல
தந்தை இருந்தும் தாயும்
இருந்தும் சொந்தம் எதுவும்
இல்ல அதை சொல்ல
தெரியவில்ல (2)

நான் ஒரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள
சோகம் தெரியவில்ல

இல்லாத உறவுக்கு என்னென்ன
பேரோ நாடோடி பாட்டுக்கு
தாய்தந்தை யாரோ (2)

விதியோடு நான்
ஆடும் விளையாட்டு பாரு
வெளையாத காட்டுக்கு
வெத போட்டதாரு பாட்டு
படிச்சா சங்கதி உண்டு
என் பாட்டுக்குள்ளையும்
சங்கதி உண்டு கண்டு பிடி

நான் ஒரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள
சோகம் தெரியவில்ல

பெண் கன்று பசு தேடி பார்கின்ற
வேலை அம்மான்னு சொல்லவும்
அதிகாரம் இல்லை (2)

என் விதி அப்போதே
தெரிஞ்சிருந்தாலே கர்ப்பத்தில்
நானே கரைஞ்சிருப்பேனே
தலை எழுத்தென்ன என்
மொதல் எழுத்தென்ன
தலை எழுத்தென்ன மொதல்
எழுத்தென்ன சொல்லுங்களேன்

நான் ஒரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள
சோகம் தெரியவில்ல
தந்தை இருந்தும் தாயும்
இருந்தும் சொந்தம் எதுவும்
இல்ல அதை சொல்ல தெரியவில்ல

நான் ஒரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள
சோகம் தெரியவில்ல

# தெய்வீக முதலை

இந்தியாவின் கேரள மாநிலம் காசர்கோடு மாவட்டம் கும்பள்ா பகுதியில் - அனந்தபுரத்தில் அருள்மிகு அனந்த பத்மநாப சுவாமி கோயில் உள்ளது. குளத்தின் நடுவே அமைந்துள்ள இந்தக் கோயில், திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலுக்கு மூலஸ்தானமாக விளங்குவது என்பது ஐதிகம். இந்தக் கோயிலின் குளத்தில் வாழ்ந்த தெய்வீக முதலை அண்மையில் இறந்தது. தெய்வீக முதலையாகவும் பபியா என்ற பெயரிலும் பக்தர்களால் சிறப்பிக்கப்பட்ட இந்த முதலையைக் குறித்த தகவல்கள், நம்மை வியக்கவும் நெகிழவும் வைப்பவை!

1945 இல் இந்தக் கோயில் வாசலுக்கு வந்த முதலை ஒன்றை பிரிட்டிஷ் இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக் கொன்றதாகவும் அதன் பிறகு இந்த முதலை திடீரென திருக்குளத்தில் தோன்றியதாகவும் செவி வழிச் செய்தி உண்டு.

கோயில் குளத்தில் வாழ்ந்து வந்த இந்த முதலை "பபியா" என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த முதலை இங்கு எப்படி வந்தது, அதற்கு பபியா எனப் பெயரிட்டது யார் என்பது குறித்த விபரங்கள் தெரியவில்லை.

அனந்தபத்மநாப சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்கள், இந்தத் தெய்வீக முதலையை ஒருமுறையேனும் தரிசித்து விட மாட்டோமா என்று காத்திருப்பார்களாம். ஆம், இதை தரிசிப்பது பெரும் பாக்கியம் என்பது இந்தப் பகுதி பக்தர்களின் நம்பிக்கை.


ஒருமுறை, இந்த முதலை கோயில் கருவறைக்கு முன் வந்து சாமி தரிசனம் செய்ததை அர்ச்சகர் தனது செல்போனில் படம் பிடித்து வலைத்தளங்களில் பகிர்ந்தார். அந்த ஃபோட்டோ அதிகளவில் பகிரப்பட்டது.

கோயிலின் திருக்குளத்தில் மீன்கள் அதிகமாக உள்ள போதும் இந்த முதலை அவற்றை உண்பது இல்லையாம். கோயிலில் நைவேத்தியம் செய்யப்பட்ட பச்சரிசி சாதத்தைக் காலையிலும் மதியமும் அர்ச்சகர் குளத்தில் போடுவார். அந்தப் பிரசாதத்தையே இந்த முதலை சாப்பிட்டு உயிர்வாழ்ந்து வந்துள்ளது.

அதேபோல், இந்த முதலைக்கு உணவு வழங்குவதை ஒரு நேர்ச்சை வழிபாடாகவே பக்தர்கள் செய்து வந்துள்ளனர். பபியா முதலை யாருக்கும் தீங்கு விளைவிக்கவோ, ஒரு போதும் மூர்க்கமாக நடந்து கொண்டதோ இல்லை என்றும் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

2019 ஆம் ஆண்டில் இந்த முதலை உயிரோடு இல்லை என்றொரு தகவல் பரவியது. அப்போது "முதலை நல்லபடியாக உள்ளது" என கோயில் நிர்வாகிகள் அறிவித்த நிகழ்வும் நடைபெற்றது. அதன் பிறகும் இந்த முதலை கோயில் வளாகத்துக்கு வந்து சென்றுள்ளது.

இந்த நிலையில் இப்போது பபியா முதலை இறந்து விட்டது. தெய்வீக முதலையின் உடல் கோயில் வளாகத்தில் பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டுள்ளது. பபியா



முதலை இறந்ததைத் தொடர்ந்து கோயில் நடை திறக்கப்படவில்லை.

முதலையின் இறுதிச் சடங்குகள் முடிந்தபிறகு கோயில் நடை திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் திரளாகக் கோயிலுக்குச் சென்று பபியா முதலைக்கு அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்!

# உயிர் காக்கும் மருந்தினால் உயிர் போக்கலாமா?

"இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இருமல் மருந்துகள், ஆபிரிக்க நாடான காம்பியாவில் 66 குழந்தைகளின் உயிர்களைப் பறித்திருக்கின்றன" என்ற செய்தி அதிர வைக்கிறது. இந்த இருமல் மருந்துகளில் எத்திலீன் கிளைகால் ம்ற்றும் டைஎத்திலின் கிளைகால் ஆகிய வேதிப் பொருள்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சளித் தொல்லைக்காக இந்த மருந்



தைக் குழந்தைகளுக்குக் கொடுத்ததில், அந்த மருந்தே நஞ்சாக மாறி சிறுநீரகத்தை பாதித்ததில் அந்தக் குழந்தைகள் உயிரிழந்திருக்கிறார்கள். இறந்தவர்கள் எல்லோருமே 2 வயதுகூட பூர்த்தியாகாத பச்சிளம் குழந்தைகள்.

இதுகுறித்து உலக சுகாதார நிறுவனம் இப்போது விடுத்திருக்கும் அபாய எச்சரிக்கை பல அதிர்வலைகளைக் கிளப்பியிருக்கிறது. இந்த நான்கு மருந்துகளையும் ஏற்றுமதி செய்திருந்தது, டில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மெய்டன் பார்மசூட்டிக்கல் கம்பெனி.

குறிப்பிட்ட அந்த நிறுவனத்தின் ஏற்றுமதி உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த மருந்து இந்தியாவில் விற்கப்படவில்லை என்று மத்திய அரசின் சுகாதாரத் துறை தெளிவுபடுத்தியுள்ளது. அதே வேளையில், 'உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டிருக்கும் எத்திலீன் கிளைகால் என்ற வேதிப் பொருள் அடங்கிய இருமல் மருந்துதான், 2020 ஆம் ஆண்டு ஜம்முவில் பத்துக் குழந்தைகளின் உயிர் பிரிய காரணமாக அமைந்ததா?' என்றும், '1998 ஆம் ஆண்டு டில்லியில் 38 குழந்தைகள் சிறுநீரக பாதிப்புக்கு ஆளா னதற்கும் இதுதான் கார ணமா?' என்றும் இப்போது இத்துறையைச் சேர்ந்தவர் களே சந்தேகங்களை எழுப்புகிறார்கள்.


குறிப்பிட்ட இந்த நிறுவனம் முறைகேடுகளில் ஈடுபட்டதாக ஏற்கனவே நான்கு முறை புகார்கள் எழுந்துள்ளன. ஒவ்வொரு முறையும் வெவ்வேறு மாநிலங்களில் எழுப்பப்பட்ட இந்தப் புகார்களின் மீது பெரிய நடவடிக்கைகள் எதுவும் அப்போது எடுக்கப்படவில்லை என்பது அதிர்ச்சி தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உடல் இரு தலை

சரித்திரம் என்பது எப்போதுமே பல மர்மங்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. சில சரித்திர ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் நம்புவதற்குக் கடினமானவை. அதுவும் செவிவழிச் செய்திகள் இவற்றுடன் கலந்து நம்மை அடையும் போது நம்பகத்தன்மை மேலும் கொஞ்சம் குறையும். அதேசமயம் பொய்கள் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு அவற்றில் பல்வேறு கோணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட சுவாரஸ்யமான அதிசயங்களையும் மர்மங்களையும் விநோதங்களையும் இந்தத் தொடர் விபரிக்கிறது.

ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த ஒரு பிரபல இசை மேதை ஜோசப்ஹைடன் மேற்கத்தேய இசை



உலகில் மிகவும் புகழ் பெற்றவர். சிம்பொனி இசையின் முன்னோடி என்று இவரைக் கூறலாம். பிரபல இசைக் கலைஞர் மொஸார்ட் இவரின் தீவிர ரசிகர்.

ஜோசப்ஹைடன் நீண்ட காலம் நோய் வாய்ப்பட்டு இறுதியாகமே 31, 1809 அன்று காலமானார். அப்போது அவருக்கு வயது எழுபத்தேழு. உலக அளவில் புகழ்பெற்ற அந்த இசைக் கலைஞரை அவரது சொந்த நாடு கௌரவிக்க நினைத்தது. அவரது உடல் கெட்டுப்போகாத அளவுக்குப் பதப்படுத்தப்பட்டது. அரசு மரியாதையுடன் அவரது உடல் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் புதைக்கப்பட்டது.

என்றாலும் அவரது வாரிசுகளுக்கு ஒரு குறை இருந்தது. மேலும் அதிக மரியாதையுடன் அவரது இறுதி ஊர்வலம் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவருக்காக ஒரு நினைவாலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் நினைத்தார்கள். ஆனால் அப்போது ஆஸ்திரியா போர்ச் சூழலில் இருந்தது தவிர நெப்போலியனின் படைகள் வேறு வியன்னாவைச் சூழ்ந்திருந்தன.

சுமார் பத்து ஆண்டுகள் கடந்த பின் ஜோசப்ஹைடனின் வாரிசுகள் அவருக்கு ஒரு நினைவாலயம் நிச்சயம் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். வியன்னாவில் இருந்து இருபத்தைந்து கிலோ மீற்றர் தள்ளியுள்ள தங்கள் கிராமத்தில் இந்த் நினைவாலயம் அமைய வேண்டும் என முடிவெடுத்தார்கள். இதற்காக அவரது உடலை வியன்னாவில் இருந்த அந்தக் கிராமத்துக்குக் கொண்டு செல்ல அரசின் அனுமதியைக் கேட்டார்கள். ஆஸ்திரிய அரசும் சம்மதித்தது. இதைத் தொடர்ந்து அவரது சவப் பெட்டி வெளியே எடுக்கப்பட்டது. அதைத் திறந்து பார்த்தவர்களுக்கு கடும் அதிர்ச்சி. அந்த இசை

> "அப்போது அறிவியல் ஆராய்ச்சிக்காக விஞ்ஞானிகளுக்கு மண்டையோடுகள் தேவைப்பட்டன. எனவே இறந்தவர்களின் மண்டையோடுகளை விற்கவும் வாங்கவும் அரசு அப்போது அனுமதி தந்தது. ஆனால் அறிவியல் ஆராய்ச்சியாளர்களை விட மந்திரவாதிகள் இவற்றை பெருமளவில் வாங்கத் தொடங்கினார்கள்."

மேதையின் துண்டிக்கப்பட்ட உடல் பகுதி மட்டுமே இருந்தது. தலையைக் காணவில்லை.

அரசு உடனே விசாரணைக்கமிஷன் ஒன்றை அமைத்தது. யார் இந்தக் குற்றத்தைச் செய்தது என்று கண்டுபிடிக்க காவல் துறையும் உளவுத் துறையும் முடுக்கி விடப்பட்டன. அவர்களின் சந்தேகம் ஜோசப்ஜீன் என்ற மந்திரவாதியின் மீது விழுந்தது.

இந்த இடத்தில் ஒரு சிறு விளக்கம். அப்போது அறிவியல் ஆராய்ச்சிக்காக விஞ்ஞானிகளுக்கு மண்டையோடுகள் தேவைப்பட்டன. எனவே




இறந்தவர்களின் மண்டையோடுகளை விற்கவும் வாங்கவும் அரசு அப்போது அனுமதி தந்தது. ஆனால் அறிவியல் ஆராய்ச்சியாளர்களை விட மந்திரவாதிகள் இவற்றை பெருமளவில் வாங்கத் தொடங்கினார்கள். (மண்டை ஓடுகளை பூஜை செய்து இஷ்ட தேவதைகளை வரவழைத்து வேண்டிய வரத்தைப் பெறும் பழக்கம் மந்திரவாதிகளிடையே இருந்தது. இதை "ப்ளாக்மேஜிக்" என்பார்கள்).

எனவே பொது மக்களிடையே மண்டையோடுகளை விற்கும் பழக்கத்துக்குக் கடும் எதிர்ப்பு உண்டானது. ஒரு கட்டத்தில் (1802 இல்) அந்த விற்பனை அனுமதி சட்டத்தை இரத்து செய்தது அரசு. அதாவது மண்டை ஓடுகளை வாங்கவும் விற்கவும் தடை விதிக்கப்பட்டது. இப்படித் தடை விதிக்கப்பட்டவுடன் மண்டையோடுகளைத் திருட்டுத் தனமாகப் பெற முயன்றனர் சில மந்திரவாதிகள். அந்தக் கோணத்தில் தான் மேலே குறிப்பிட்ட ஜோசப்ஜீன் என்ற மந்திரவாதி மீது சந்தேகம் விழுந்தது.

ஒரு வேளை அவர்தான் திருட்டுத்தனமாக இசை மேதையின் தலையைத் துண்டித்து எடுத்துச் சென்று விட்டாரோ என்று விசாரணை நடந்தது. அவர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டார். ஆனால் எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. ஹைடனுக்கு ஏற்கெனவே அறிமுகமான இருவர். பீட்டர் மற்றும் ரோஸன் பாம் என்பவர் களின் மீதும் கூட சந்தேகம் எழுப்பப்பட்டது. அவர்கள் தங்களது அரைகுறை அறிவியல் ஆராய்ச்சிக்கு அந்த மண்டையோட்டைப் பயன் படுத்தியிருக்கலாம் என்று பேசிக் கொண்டனர்.

சில வருடங்களுக்குப் பிறகு மருத்துவக் கல்லூரியில் உடலுறுப்பு ஆராய்ச்சியாளராக விளங்கிய ஒருவரிடம் ஜோசப்ஹைடனின் மண்டை ஓடு இருப்பதாக ஒரு தகவல் கசிந்தது. அவரிடம் விசாரித்த போது தனக்கு இது குறித்து எதுவும் தெரியாது என்றார். தன்னிடம் இருக்கும் மண்டை ஓட்டை அவர்கள் சரிபார்க்கலாம் என்றார். "எனக்கு ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் கொடுத்துத் தொலையுங்கள்" என்று கத்தினார்.

ஆனால் பல வருடங்களான மண்டை யோட்டை வைத்துக் கொண்டு அது அந்த் இசை மேதையின் மண்டையோடு தானா என்பதைத் தீர்மானிக்கும் அளவுக்கு அந்தக்கால அறிவியல் முன்னேற்ற மடையவில்லை. எனவே இந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது அரசு.

இந்த நிலையில் இசை மேதையின் தலையில்லாத உடலுக்கு ஒரு செயற்கைத் தலைப் பகுதியைப் பொருத்தி நினைவாலயம் ஒன்றை எழுப்பினார்கள். பல வருடங்கள் கழிந்த பிறகு பால் எஸ்டெர் ஹேசி என்ற இளவரசரின் கடும் முயற்சியால் பல கைகள் மாறியிருந்த ஹைடனின் தலைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. (ரோஸன்பாம் மூலமாகத்தான் அந்தப் பகுதி கைமாறியதாம்) அந்தப் பகுதியும் அவரது உடலில் பொருத்தப்பட்டது. பழைய தலையை நீக்குவதற்கும் தயக்கம் உண்டானது. எனவே இரண்டு மண்டையோடுகளுடனும் அந்த இசைமேதையின் உடல் காட்சியளிக்கிறது!

(மர்மம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்திரம் ஏதுக்கடி!

பட்ட காலிலே படும் என்றார்கள்
பட்டுக் கொண்டே இருக்கிறது
அவர்கள் படுவதாய் இல்லை!

கெட்ட குடியே கெடும் என்றார்கள்
குடி கெட்டுக் கொண்டேயிருக்கிறது
அவர்கள் கெடுவதாய் இல்லை!

முல்லைக்குத் தேர் விட்ட
பாரி கதை கேட்டு வளர்ந்தவர்க்கு
காலுக்கு முள் வைக்கும் கதை கேட்க
விதியோ இல்லை இது சதியோ!

இருளின் எல்லைக்கு
வெளிச்சம் வினையாகும் - எனின்
ஒளி இருளை விழுங்கியே தீரும்

மொழியும் மதமும் மனிதர்க்கு
நல்வழியே தவிர
முடிச்சுக்கள் நிறைந்த கயிறல்லவே!

கல்லொன்று உண்டு- அதை
காலில் மிதிபட வைப்பதா?
இல்லை கைகூப்பி வணங்குவதா?
என்பதற்கு பஞ்சாயத்து எதற்கு?
சிற்பியின் சுத்தி தட்டொன்று போதுமே!

மாலை.நா.கஜேந்திரன்.



# வழிகாட்டும் தீபங்கள்

கல்வி என்னும் மூன்றெழுத்தைப்
பள்ளியிலே கற்றுத் தந்து
பண்புடனே நாம் வாழ
பகுத்தறிவைப் புகட்டி நின்றீர்
அன்பாக அரவணைத்து
ஆற்றிவை எமக்கூட்டி
பாரினிலே உயர்ந்தோங்க
பாசத்தைப் பொழிந்து நின்றீர்
போராடி நாம் வாழ
கைகோர்த்துத் தோள் கொடுத்து
பாகுபாடு காட்டாது
தைரியம் காட்டி நின்றீர்
மூத்தோரின் அறிவுதனை
முழுமையாக எடுத்துக்கூறி
முயற்சியுடன் பயிற்சி கொடுத்து
பாராட்டுப் பொழிந்து நின்றீர்
காலத்தின் மோகத்தினை
கல்வியே வெல்லும் என்று
காற்றின் வேகத்தைப் போல்
கடுமையாகக் கற்றுக் கொடுத்தீர்
முத்தான சித்திரங்களாய்
மண்ணிலே நாம் வாழ
வற்றாத தீபமாய்
ஒளி கொடுத்துத் தாம் மாறி
வழிகாட்டும் எம்மவர் ஆசிரியர்க்கு
சிரம் தாழ்த்தி வாழ்த்துகிறோம்.

அ.பிருந்திகன்
யா/ஊ.றோ.க.த.ஆண்கள் பாடசாலை
ஊர்காவற்றுறை.

# வாழ்ந்திடல் சத்தியமே

கல்வியிற் சிறந்தவர்
வாழ்ந்திடும் நாட்டில்
கறைகள் வளர்வதில்லை
சொல்லில் அடங்காத
துயரில் வீழ்ந்தவர்
துடித்துத் துவள்வதுவோ?

எல்லை இல்லாத் துயர்
தன்னில் வீழ்த்தியே
வாழ்வதில் இலாபமென்ன?
கல்வியில் சிறந்தவர்
வாழ்ந்திடும் நாட்டினில்
கவலைகள் இல்லையன்றோ?

தொல்லை மிக்கதோர்
இனத்தினை வேரறுத்து
ஆள்வது அநியாயம்
சின்னத் தனங்கள்
நம்மை ஒழித்தால்
சிறப்புடன் வாழ்ந்திடலாம்.

பல்லின மக்கள்
வாழ்ந்திடும் நாட்டில்
வாழ்ந்திடக் கூடாதா?
கல்விச் சிறப்பால்
வாழ்வதை வகுத்து
வாழ்ந்திடல் சத்தியமே.



வளவை வளவன்

## மௌனத்தின் தேடல்- 579




## அழுவது அப்பாவுக்கல்ல

தாத்தா காலத்தில் வளமான குடும்பம்
அப்பா வந்ததும் அல்லற்பட்டது
வீடு, நகை எல்லாம் விட்டுச் சென்றன
பொலிஸ், கோட்டு, கச்சேரி ஏறி இறங்கினோம்
அம்மாவின் ஆஸ்தி கரைந்தே போனது
அப்பா கூடி மதுவைக் குடித்தார்
மது அவரைக் குடித்து விட்டது
நாங்கள் அழுவது அப்பாவுக்கல்ல.

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## போதை

மனிதனை மிருகம் ஆக்கும் போதையே
ஆறாம் அறிவை மழுங்கு அடித்தாய்
பலரின் வாழ்வை சீரழித்தாய்
போதை அரக்கனின் கோர தாண்டவம்
வீடுகள் எங்கும் மரண ஓலம்
நடுவீதிக்கே வாழ்வைக் கொண்டு வந்தாய்
பெரும் துயரில் மக்கள் கூட்டம்
குடி குடியைக் கெடுக்கும்.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## வீழ்ந்து கிடக்கிறான்

அடுப்பில் உலை ஏற்றி
அரிசி வரும் என்று
காத்திருக்கிறாள் அம்மா
இடுப்பில் துணியும் இன்றி
வீழ்ந்து கிடக்கின்றான் அப்பன்.


பிரகவி, கொக்குவில்.

## வலி நிறைந்த வாழ்க்கை

வாழ்க்கையின் பிடிதனிலே கனவுகள் தனை
நெஞ்சோரம் தனிலே சுமந்து
எட்டெனா கனவுகளிலே நாலனா கனவுகள்
பலித்திடாதா என ஏங்கி
நான்மறைகள் தனை ஓதி நாட்களை எண்ணி
நான்வேதங்களை கற்றுணர்ந்து
நவரசங்களையும் என்னுள்ளே பொதித்து
கண்ணுக்குள்ளே பொத்தி வைத்த அத்தனை கனவுகளும்
ஒத்தை நிமிடத்திலே கானல் நீராய் கரைந்து போகும் தருணம்
நான் வாழ்க்கை மீது கொண்ட அதீத நம்பிக்கையும்
என்னுடைய வாலிபமும் மறைந்தும் மறந்தும் தான் போகிறது
வாழ்க்கையில் வலியுடன் வாழலாம்
வாழ்க்கையையே வலியாய் வாழ்கின்ற இப்பிறவியிலே
அசைக்க முடியாத உள்ளம் கொண்ட சக்தியாய் நான்!

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## மௌனத்தின் தேடல்- 580



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அறிவு திறந்திட

குடும்பம் என்ற கோவிலை
குழப்பிய பழக்கமிதோ
குடும்பத் தலைவனின்
குணம் தடுமாறிடுமாயின்
கொண்டவள் பாடெதுவோ
அடுத்து வருகின்ற சந்ததிதானும்
அழிவுக்கு வித்திடவோ
எடுத்ததெற்கெல்லாம் போதை
இன்பம் தருமென்றவர்
வார்த்தையின் நீதியிதா
அறிவு திறந்திட ஆன்மிக
நெறி பயில அனைவரும்
இணைந்து கொண்டால்
இவ்விடர் நீங்கும் எம்மண்
செழிக்கும் இதையுணர் மானுடமே!

வைகை வாசன்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் பாகம்

சாண்டில்யன்

# கடல் புறா

காலத்தின் பதிவு 36

## நடனமாடினாள்

பின்னணி வாத்தியங்கள் அப்பொழுதும் முழுங்கிக் கொண்டுதானிருந்தன. ஆனால் மஞ்சளழகியின் குயில் குரலுக்கு முன்பு அவை இருப்பதாகவே தெரியவில்லை. மெல்ல மெல்ல அவள் மேல் ஸ்வரங்களை தொடத் துவங்கினாள். மேல் ஷட்ஜத்தைத் தொட்டு அதற்கு மேலுள்ள பஞ்சமத்தையும் தொட்டாள். பஞ்சமத்தைத் தொட்டு மீள்வதே கஷ்டம். அந்தப் பஞ்சமத்தில் அவள் சாரீரம் வண்டு போல் ரீங்காரம் செய்து நீண்ட சஞ்சாரத்துக்கு இடம் கொடுத்தது.

அவளது குயில் சாரீரம் இழைந்து இழைந்து குழைந்து மேலே ஏறியும் பெரும் நீர்வீழ்ச்சி போல் கம்பீரமாக விடுவிடு என்று கீழே இறங்கியும் இடையே பற்பல அற்புத புஷ்பங்களை வீசியும் பெரும் மயக்கத்தையே தந்தது.

இளையபல்லவனுக்குப் புரியாத சொர்ணத் தீவின் ராகப் பிரஸ்தாரத்தைச் சில நிமிஷங்களே செய்தாள் அவள். பிறகு சரும வாத்தியங்கள் முழங்க ஒற்றையடி தந்தி வாத்தியம் டங் டங்கென ஒலிக்க, தாள வாத்தியங்கள் ஜல் ஜல் என சப்திக்கக் காவி மொழியில் ஒரு காதற்பாட்டையும் அவள் தொடங்கினாள்.

காவி மொழியை நன்றாக அறிந்த இளைய பல்லவன் அந்தப் பாட்டிலிருந்து அந்த நடனம் வாஜாங் பூர்ணா என்பதைத் தெரிந்து கொண்டான். வாஜாங் பூர்ணா புராணக்கதை நடன முறையாகையால் பாட்டு, புராணத்தைப் பற்றியதாயிருந்தது. சுபத்திரை அர்ஜுனனை நினைத்து ஏங்குவதாக இருந்தது பாட்டின் கருத்து.

இராமாயண, மகாபாரதக் கதைகள் வாஜாங்கின் அஸ்திவாரம் என்பதை அறிந்த இளையபல்லவன் தனது நாட்டை நினைத்துப் பெருமிதம் கொண்டான். அடுத்த விநாடி நாடு மறைந்தது, பெருமிதம் மறைந்தது. நின்றது ஒன்றுதான். எதிரே இருந்த மஞ்சளழகியின் நடனந் தான் அது.

சுபத்திரையின் வேதனையைத் திரும்பத் திரும்பப் பலவிதமாக ஆடிக் காட்டினாள் மஞ்சளழகி. அவளுக்குத் தேறுதல் சொல்லப் பக்கத் திரையிலிருந்து பல தோழிகளும் வந்தார்கள். நட்சத்திரக் கூட்டத்திடையே தவழ்ந்த முழுமதியென அந்தத் தோழிகளின் இடையே ஆடினாள் மஞ்சளழகி. அந்த அழகிய தோழிகளின் ஆறுதலையும் சகியாத அவள் காட்டிய பாவங்கள் கூட்டத்தின் இதயத்தைக் கரைத்துக் கொண்டிருந்தன. கடினமான இதயமுடைய கொள்ளைக்காரர் கண்களிலும் கற்பைப் பற்றி அதிகமாகக் கவலைப்படாத அவர்கள் துணைவிகள் கண்களிலும் துக்க நீர் பெருகியோடியது. அத்தனை அழகாக ஆடினாள் அவள்.

அவள் சாய்ந்து சாய்ந்து, துக்கித்துக் துக்கித்து பாடிப் பாடி எதிரே திரும்பத் திரும்பக் கைகளை நீட்டினாள். பரந்தாமன் எங்கேயென்று ஆகாயத்தில் கண்களை வீசிப் பரிதவித்தாள். அவள் கண்கள் மீண்டும் இளையபல்லவனைப் பார்த்தன. கரங்களும் அவனை நோக்கியே நீண்டன. இளைய பல்லவன் இதயம் படபடத்தது. சரும வாத்தியங்கள் அந்தப் படபடப்புக்கு ஆதாரம் தருவனபோல் டமடமவென மெல்ல சப்தித்தன. மதியை அடியோடு இழக்கும் நிலைக்கு வந்துவிட்டான் இளையபல்லவன்.

திடீரென அவள் சோககீதம் மகிழ்ச்சிக் கீதமாக மாறியது. கண்ணன் வந்துவிட்டதாகச் சுபத்திரை அபிநயித்தாள். சற்றே வெட்கம் காட்டினாள். கண்ணன் ஆசி கிடைக்கவே ஆனந்தத் தாண்டவம் தொடங்கினாள்.

(தொடரும்...)

# உலகின் தொழில்திறன் அதிசயங்கள் பகுதி -3


அட்லாண்டிக்கில் இருந்து லிமோன் வளைகுடா என்ற ஒரு பெரிய இயற்கைத் துறைமுகம் வழியாக 8.7 கி.மீ தூரத்தில் நுழையும் வண்ணம் திட்டமிடப் பட்டது. அங்கிருந்து பனாமாவில் உள்ள கொலான் இலவசத் துறைமுகத்திற்குச் செல்லும்படி ஆலோசிக்கப்பட்டது. கொலானுக்கும் பனாமா நகருக்கும் இடையே உள்ள மலைப் பிரதேசத்தில் மூன்று அணைகள் கட்டப்பட்டு மழைநீர் சேமிக்கப்பட்டது.

பனாமா திட்டத்திற்காக மூன்று ஏரிகள் செயற்கையாக அமைக்கப்பட்டன.

அவற்றில் காட்டுன் ஏரி எனப்படும் செயற்கை ஏரி மனிதன் அமைத்த ஏரிகளில் உலகப் பெரும் ஏரியாகக் கருதப்படுகிறது.

அதன் நீளம் 2.4 கி.மீ அகலம் முக்கால் கி.மீ ஆழம் 80 அடி கடல் மட்டத்திற்குச் சுமார் 90 அடிக்கு மேலுள்ள அந்த செயற்கை ஏரியில் பருவமழை அதன் உரிய காலத்தில் பெய்து, நீரை நிரப்பிக் கொண்டே வருகிறது. பனாமாக் கால்வாயில் செல்லும் கப்பல் முதலில் 7 மைல் தூரம் கடல் மட்டத்தில் பயணித்து, ஏரியை நெருங்கும் போது மூன்றடுக்கு தொட்டிகளில் அமைந்துள்ள ஒவ்வொரு படிக்கட்டிலும் 30 அடி வீதம் நீரால் உயர்த்தப்பட்டு பின்னர் 90 அடி உயரத்தில் உள்ள காட்டுன் ஏரியில் பயணத்தைத் தொடர்கிறது.

அதன் பிறகு பனாமா நகரை நெருங்கும் போது மறுபடியும் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மூன்றடுக்கு தொட்டிகளில் உள்ள ஒவ்வொரு படிக்கட்டிலும் 30 அடி வீதம் மெல்ல இறங்கி மீண்டும் கடல் மட்டக் கால்வாயில் தொடர்கிறது.



இப்படியான அமைப்பினை சாத்தியப்படுத்திய இந்தப் பொறியியல் சாதனைக்காகத்தான் இத்திட்டத்தை உலகத் தொழில்திறன் அதிசயங்களில் ஒன்றாக புகழ்கிறார்கள்.

78 கி.மீ நீளமும் 33.5 மீற்றர் அகலமும் கொண்ட பனாமாக் கால்வாய் 1914 ஆம் ஆண்டு திறக்கப்பட்டபோது ஆண்டுக்கு 1000 கப்பல்கள் சென்றன. 2009 ஆம் ஆண்டு கணக்குப்படி, அந்தக் கால்வாயின் வழியே சென்ற கப்பல்களின் எண்ணிக்கை 14,000 ஐ தாண்டியது.

ஒவ்வொரு ஆண்டும் 140 மில்லியன் தொன் வணிகச் சுமைகள் பனாமாக் கால்வாய் மூலமாகக் கடந்து செல்கின்றன. அவற்றில் கால்பாகம் பெற்றோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள், எஞ்சியவை தானியங்கள், உணவுப் பொருட்கள், இயந்திரங்கள், மோட்டார் வாகன உதிரிப் பொருட்கள் ஆகியன.

எல்லாவற்றுக்கும் மேலாக 2.4 மில்லியன் தொன் கார் வாகனங்கள் கால்வாய் வழியாகக் கொண்டு செல்லப்பட்டு புதிய கார் வணிகம் பெருகி வளர்ந்துள்ளது.

முழுச்செலவு, தொழில்நுட்பத் திறன், ஆட்கள் என யாவற்றையும் கொண்டு அமெரிக்கா கட்டி முடித்தாலும் 1903 ஆம் ஆண்டு எழுதப்பட்ட பனாமாக் கால்வாய் ஒப்பந்தப்படி அமெரிக்கா 96 ஆண்டுகள் உரிமை கொண்டாடி கடந்த 1999 டிசெம்பர் 31 ஆம் திகதி, பனாமாக் கால்வாய் ஆட்சி உரிமையை பனாமாக் குடியரசின் கைவசம் ஒப்படைத்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

312

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# அநியாய மரணங்களை தவிர்க்க

120 வருடங்களுக்கு முன் வாழ்ந்த யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் 120 வருடங்களின் பின் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்கப் போவதுமில்லை. இது சர்வ நிச்சயமானது. இருந்த போதும் மனிதன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழும் காலத்தை கூட்டுவதற்காகவே நாம் போராட வேண்டி இருக்கிறது. இந்தப் போராட்டத்தின் வெற்றிக்காக நாம் அனைவரும் சிந்திப்பதற்கும் செய்வதற்கும் நிறையவே இருக்கின்றன.

இறப்புக்களை தாங்கிக் கொள்வது, சகித்துக் கொள்வது மிகவும் துயரமானதும் கஷ்டமானதுமான அனுபவம் என்பது எவருக்கும் புரியும். இந்த இறப்புக்களை மறைக்கவோ நியாயப்படுத்தவோ முயல்வது மனிதத்துவத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமானது.

இளம் மனைவியையும் பிஞ்சுக் குழந்தைகளையும் தவிக்க விட்டு மாரடைப்பால் மரணித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? ஈரல் நோய் காரணமாக இரத்த வாந்தியுடன் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? திடீரென ஏற்பட்ட பாரிசவாதத்தால் நம்மை விட்டு மறைந்து போனவர்கள் எத்தனை பேர்?

தொழிலுக்குப் போகும் பாதையிலே வாகனத்தால் மோதுண்டு மடிந்து போனவர்கள் எத்தனை பேர்? நஞ்சுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? சமூக விரோத கும்பல்களினால் சட்டத்துக்குப் புறம்பான விதத்திலே கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? உடல் பருத்து நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் ஏற்பட்டு மரணிப்பவர்கள் எத்தனை பேர்? கலாசார சீர்கேடுகள் காரணமாக சிக்கல்களுக்கு ஆட்பட்டு மனவேதனையுடன் மரணிப்பர்கள் எத்தனை பேர்? சுற்றாடல் மாசடைவதால் தொற்றுநோய்கள் மற்றும் புற்றுநோய் என்பன ஏற்பட்டு இறந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உறவினர்களின் ஆதரவோ அரவணைப்போ இன்றி அன்புக்கு ஏங்கி மரணித்துப் போகும் முதியவர்கள் எத்தனை பேர்? முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த இறப்புக்களுக்கு எல்லாம் யார் பொறுப்பு?

மக்களுக்கு போதுமான மருத்துவ சுகாதார அறிவை புகட்டத் தவறிய மருத்துவத்துறையினரின் குற்றமா? ஆரோக்கியமற்ற உணவுப் பொருள்களையும் பானங்களையும் அருமருந்து போல போலியாக விளம்பரம் செய்ய இடமளித்த ஊடகத்துறையினரின் குற்றமா?

உடற்பயிற்சி ஓர் உயிர்காப்பு பயிற்சி என்பதை சிறுவர்கள் மனதிலே பதிப்பிக்கத் தவறிய பெற்றோர்களின் குற்றமா? நோயுற்று மருத்துவமனைக்கு வரும் பொழுது அதி உச்ச கவனிப்பு வசதிகளையும் கவனிப்பையும் உறுதிப்படுத்தாக சுகாதாரத் துறையினரின் குற்றமா? உயிர் கொல்லிகளான சிகரெட், சுருட்டு, பீடி போன்றவற்றை கடைகளிலே விற்பனை செய்வதற்கு அனுமதித்தவர்களின் குற்றமா? போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாது போன பொலிஸாரின் குற்றமா?

தீய பழக்கங்களையும் சமுதாய சீரழிப்பு நடவடிக்கைகளையும் எம்மிடையே பரப்ப அனுமதித்துக் கொண்டிருக்கும் எமது சமுதாயக் கட்டமைப்பின் குற்றமா? ஒருவரை பசியாத பொழுதும் உண்ணுமாறு வற்புறுத்துவதை ஓர் உபசரிப்பு முறையாகக் கருதும் எமது கலாசாரத்தின் குற்றமா?

எமது மக்களிடையே அன்பு, அமைதி, ஆதரவு, மன்னிக்கும் மனோபாவம், துயர் துடைப்பு, தியானம் போன்ற நல்ல விடயங்களை வேரூன்ற வைக்கத் தவறிய எமது மதங்களின் குற்றமா? பொன் கொழிக்கும் விளைநிலத்திலே உயிர்கொல்லிகளான புகையிலையை பயிரிட்டும் நஞ்சு தெளிக்கப்பட்ட மரக்கறி, பழ வகைகளை சந்தையிலே விற்பனை செய்யும் வருகின்ற விவசாயிகளின் குற்றமா? சந்து பொந்துகள் எங்கும் சாராயக் கடைகள் திறக்க அனுமதித்தவர்களின் குற்றமா?

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிய கற்றறிந்தவர்களின் குற்றமா? சமுதாய சீர்கேடுகளுக்கு வழிகோலும் ரி.வி தொடர் நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகி இளம் சமுதாயத்தினரையும் அதற்கு பலிகொடுத்துக் கொண்டிருக்கும் குடும்பத்தவர்களின் குற்றமா? தெருவிலே வாகனம் செலுத்துவதற்கு தகுதி அற்றவர்களையும் தகுதி அற்ற வாகனங்களையும் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கும் வீதி ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களின் குற்றமா?

தவிர்க்கப்படக் கூடிய மரணங்களைத் தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது என்பது புலப்படுகிறது. நாம் மற்றவர்களை திருத்த முயல்வது போலவே எம்மையும் சற்று மாற்றிக்கொள்ள முயல்வோம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

நாம் விடும் தவறுகளையே நாமே அடையாளப்படுத்தி எம்மை நாமே திருத்திக் கொள்ள முயலும் பயிற்சியானது உண்மையிலேயே மிகவும் கடினமானது. ஆனால் இதுதான் மனிதனை மனிதத்துவம் மிக்கவனாக மாற்றும் ஒரு முக்கியமான இயல்பாக அமையும். தான் விடும் தவறுகளை தானே புரிந்து கொள்ளத் தெரியாத தன்மையே சுகாதார மேம்பாட்டுக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்

# மரங்கள் என்ற மருத்துவ சுடர்கள்



எமது சுகத்தையும் சுற்றாடலையும் காத்து, சூழலிலுள்ள அசுத்தக் காற்றை வடிகட்டி சுத்திகரித்து சுவாசக்காற்றான ஒட்சிசனை அள்ளி வழங்கியும் எமது சுகம் காத்து சத்துணவையும் மருத்துவ மூலிகைகளையும் தந்து, நிழலையும் குளிர்ச்சியையும் மழை வீழ்ச்சியையும் கொடுத்து, நோய்த் தாக்கங்களிலிருந்து மனிதனைக் காத்து, மலர்களினால் சுற்றாடலுக்கும் மனதுக்கும் மலர்ச்சியைக் கொடுத்து, மனச்சஞ்சலங்களை நீக்கி, எமது மண்ணை கடல் விழுங்க விடாது மண்ணரிப்பில் இருந்து காத்து, எமது உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலையைக் காத்து நிற்கும் மரங்கள் என்ற மருத்துவச் சுடர்கள் பலவற்றை வீடு தோறும் ஏற்றி அந்தச் சுடர்களை வளர்த்து ஆரோக்கிய வாழ்வியலில் நாமும் பங்கு கொள்வோம்.

நித்திலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 02





இந்த மனோகரமான தோற்றத்தின் இனிமையையும் குதூகலத்தையும் அதிகப்படுத்தும்படியான இன்னும் சில காட்சிகளை வந்தியத்தேவன் அங்கே கண்டான்.

அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங்களிலிருந்து தந்த நிறத் தென்னங் குருத்துக்களால் சப்பரங்கள் கட்டி இழுத்துக் கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்து கொண்டிருந்தார்கள்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிபர்களும் கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவ்வந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன. கூட்டாஞ் சோறும் சித்திரான்னமும் எடுத்துக் கொண்டு பல குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள்.

சிலர் ஏரிக்கரையில் தண்ணீர் ஓரமாக நின்று கொண்டு, சித்திரான்னம் முதலியவற்றைக் கமுகு மட்டைகளில் போட்டுக் கொண்டு உண்டார்கள். இன்னும் சில தைரியசாலிகள் சிறிது தூரம் தண்ணீரில் நடந்து சென்று வடவாற்றங்கரையை அடைந்து அங்கு நின்றபடி சாப்பிட்டார்கள்.

குழந்தைகள் சிலர் சாப்பிட்ட கமுகு மட்டைகளைக் கணவாய்களின் ஓரமாய் எறிய, அந்த மட்டைகள் கணவாய்களின் வழியாக ஏரிக்கரைக்கு வெளியே விழுந்தடித்து ஓடி வருவதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள்.

ஆடவர்களில் சில வம்புக்காரர்கள் தங்கள் காதலிகளின் கூந்தல்களில் சூடியிருந்த மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்துக் கணவாய் ஓரத்தில் விட்டு ஏரிக்கரைக்கு மறுபக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப்பாட்டும் வெள்ளப்பாட்டும் கும்மியும் சிந்தும் பாடினார்கள்.

“வடவாறு பொங்கி வருது
வந்து பாருங்கள், பள்ளியரே!
வெள்ளாறு விரைந்து வருது
வேடிக்கைபாருங்கள்தோழியரே!
காவேரி புரண்டு வருது காண
வாருங்கள். பாங்கியரே!”

என்பன போன்ற வெள்ளப் பாட்டுக்கள் வந்தியத்தேவன் செவிகளில் இன்ப வெள்ளமாகப் பாய்ந்தன.

வேறு சிலர் சோழ குல மன்னர்களின் வீரப் புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முப்பத்திரண்டு போர்களில் ஈடுபட்டு உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை ஆபரணங்களாகப் பூண்டிருந்த விஜயாலய சோழனின் வீரத்தை சில பெண்கள் பாடினர்கள். அவனுடைய மகன் ஆதித்த சோழனுடைய வீரத்தைப் போற்றி அவன் காவேரி நதி உற்பத்தியாகுமிடத்திலிருந்து கடலில் சேரும் இடம் வரையில் அறுபத்து நான்கு சிவாலயங்கள் எடுப்பித்ததை ஒரு பெண் அழகிய பாட்டாகப் பாடினாள்.

“ஆதித்தனுடைய மகன் பராந்தக சோழ மகாராஜன் பாண்டியர்களையும் பல்லவர்களையும் சேரர்களையும் வென்று, ஈழத்துக்குப் படை அனுப்பி வெற்றிக்கொடி நாட்டிய மெய்க்கீர்த்தியை இன்னொரு பெண் உற்சாகம் ததும்பப் பாடினாள். ஒவ்வொருத்தியும் பாடியபோது அவளைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டார்கள். அவ்வப்போது “ஆ! ஆ!” என்று கோவித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

குதிரை மீது இருந்தபடியே அவர்களுடைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனை ஒரு மூதாட்டி கவனித்தாள். “தம்பி! வெகு தூரம் வந்தாய் போலிருக்கிறது. களைத்திருக்கிறாய்! குதிரை மீதிருந்து இறங்கி வந்து கொஞ்சம் கூட்டாஞ்சோறு சாப்பிடு!” என்றாள்.

உடனே, பல இள நங்கைகள் தம் வாலிபப் பிரயாணியைப் பார்த்தார்கள். அவனுடைய தோற்றத்தைக் குறித்துத் தங்களுக்குள் இரகசியமாய்ப் பேசிக் கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். வந்தியத்தேவனை ஒரு பக்கம் வெட்கமும் இன்னொருபுறம் குதூகலமும் பிடுங்கித் தின்றன. அந்த மூதாட்டி சொற்படி இறங்கிச் சென்று அவள் தரும் உணவைச் சாப்பிடலாமா என்று ஒரு கணம் சிந்தித்தான். அப்படிச் சென்றால், அங்கே நின்ற இள மங்கைமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்து கொண்டு பரிகசித்துச் சிரிப்பார்கள் என்பது நிச்சயம். அதனால் என்ன? அத்தனை அழகிய பெண்களை ஒரே இடத்தில் காண்பது சுலபமான காரியமா? அவர்கள் தன்னைப் பரிகசித்துச் சிரித்தாலும் அந்த ஒலி தேவகானமாகவே இருக்கும்.

வந்தியத்தேவனின் யௌவனக் கண்களுக்கு அந்த ஏரிக்கரையில் நின்ற நங்கைகள் எல்லாரும் ரம்பைகளாகவும் மேனகைகளாகவுமே தோன்றினார்கள்!

ஆனால், அதே சமயத்தில் தென்மேற்குத் திசையில் வடவாற்றின் நீரோட்டத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைச் சிறிது தயங்கச் செய்தது. வெள்ளைப் பாய்கள் விரிக்கப்பட்ட ஏழெட்டுப் பெரிய ஓடங்கள், வெண் சிறகுகளை விரித்துக் கொண்டு நீரில் மிதந்து வரும் அன்னப் பட்சிகளைப் போல், மேலக் காற்றினால் உந்தப்பட்டு விரைந்து வந்து கொண்டிருந்தன.

ஏரிக்கரையில் பலவகைக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அத்தனை பேரும் அந்தப் படகுகள் வரும் திசையையே ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார்கள்.


அந்தப் படகுகளிலே ஒரு படகு எல்லாவற்றுக்கும் முன்னதாக விரைந்து வந்து ஏரிக்கரை வடக்கு நோக்கித் திரும்பும் மூலையை அடைந்தது. அந்தப் படகில் கூரிய பிரகாசமான வேல்களை ஏந்திய ஆஜானுபாகுவான வீரர்கள் பலர் இருந்தார்கள்.

அவர்களில் சிலர் ஏரிக்கரையில் குதித்திறங்கி அங்கே இருந்த ஜனங்களைப் பார்த்துப் “போங்கள்! போங்கள்!” என்று விரட்டினார்கள்.” அவர்கள் அதிகமாக விரட்டுவதற்கு இடம் வையாமல் ஜனங்களும் அவரவர்களுடைய பாத்திரங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து கரையேறத் தொடங்கினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசூரினா கடற்கரையில் அப்துல் கலாமின் மணல் சிற்பம்




(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ. அப்துல் கலாமின் மணல் சிற்பம் காரைநகரிலுள்ள கசூரினா கடற்கரையில் உருவாக்கப்பட்டது. அப்துல் கலாமின் 91ஆவது பிறந்ததின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிலையில் வேலணையைச் சேர்ந்த மணல் சிற்பக்கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரால் அப்துல் கலாமின் மணல் சிற்பம் உருவாக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், காரைநகர் பிரதேச சபை தவிசாளர் க.பாலச்சந்திரன், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டதுடன் மணல் சிற்பக் கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரை ஊக்குவிக்கும் பொருட்டு இந்திய துணைத் தூதரால் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது. (4-33)



வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து மருத்துவ முகாமும் மாற்றாற்றல் உடையோருக்கான நலன்புரி அட்டை வழங்கலும் வவுனியா வடக்கு கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது. (படம்:-சதீஸ்)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூதாட்டி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதிகளில் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனும் குற்றச்சாட்டில் மூதாட்டி ஒருவர் காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுப்பிட்டி மற்றும் வல்வெட்டி ஆகிய பகுதிகளில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனும் குற்றச்சாட்டிலையே வடமராட்சி ஊரிக்காடு பகுதியைச் சேர்ந்த மூதாட்டி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூதாட்டியிடமிருந்து 8 பவுண் தாலி, ஒரு கிராம் 630 மஞ்சாடி நிறையுடைய தோடு, 625 மில்லி கிராம் நிறையுடைய பஞ்சாயுத பென்டன் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் வங்கிகளில் அடகு வைத்த பற்றுச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூதாட்டி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (4-33)

# தொலைபேசிகள் திருட்டு சந்தேகநபர் கைது

(கண்டாவளை)

துணுகாய் மல்லாவி பகுதியில் நள்ளிரவு வேளையில் கடை உடைத்து தொலைபேசிகள் திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மல்லாவி பகுதியில் நேற்று முன்தினம் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொலைபேசி கடை உரிமையாளர், மாலை கடையினைப் பூட்டி விட்டு வீடு சென்று நேற்றுக் காலை கடையினை திறப்பதற்காக வந்த வேளை கடை உடைக்கப்பட்டு தொலைபேசிகள் திருடப்பட்டு அங்கிருந்த பணங்கள் களவாடப் பட்டுள்ள சம்பவம் கண்டு மல்லாவி பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இதேவேளை மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பத்திராய மற்றும் குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பீயரத்ன மற்றும் உதயகுமார தலை மையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்த வேளை 18 வயதான அதே இடத்தை சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து களவாடப்பட்ட தொலை பேசிகள் மற்றும் பணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4-315)

# வவுனியாவில் விபத்து ஒருவர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்று காலை கனரக வாகனம் குடைசாய்ந்து விபத் துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

தவசிக்குளம் பகுதியூடாக பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனம், சாரதியின் கட்டுப் பாட்டையிழந்து வீதியினை விட்டு கீழ் இறங்கி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 250 | 300 |
| தக்காளி | 350 | 350 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 220 | 200 |
| கோவா | 350 | 300 | 280 | 300 |
| கரட் | 260 | 370 | 380 | 400 |
| பூசணி | 180 | 180 | 200 | 200 |
| புடோல் | 250 | 200 | 150 | 240 |
| வாழைக்காய் | 200 | 150 | 130 | 200 |
| சின்ன வெங்காயம் | 480 | 350 | 200-600 | 500 |
| பெரிய வெங்காயம் | 260 | 240 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 600 | 600 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 450 | 350 |
| லீக்ஸ் | 280 | 260 | 280 | 320 |
| பீற்றூட் | 280 | 250 | 270 | 350 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 650 | 650 | 600 |
| போஞ்சி | 600 | 400 | 360 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 140 | -- | 230 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 | -- |
| தேசிக்காய் | 800 | 600 | 650 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-100 | 50-70 |
| இராசவள்ளி | 260 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 370 | 450 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 80 | 180 | 100 | 120 |

# புகையிரதத்துடன் மோதுண்டு இரு யானைகள் பலி

(தருமபுரம்)

புகையிரத்துடன் மோதுண்டு இரு யானைகள்பலியாகியுள்ளன. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதமே யானையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளன. புகையிரதம் சுமார் 1 மணி நேரத்தின் பின்னர் சேவைக்கு திரும்பியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாரும் வனஜீவராசிகள் திணைக்களமும் தனித்தனியான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-316)

# விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார் திலினி



(கொழும்பு)

நிதி மோசடிச் சம்பவத்தில் ஈடுபட்டு சிறையில் உள்ள சந்தேக நபரான திலினி பிரியமாலி நேற்று சிறைச்சாலையில் இருந்து விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை அழைத்துச் செல்லப்பட்டார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியின் பிரகாரம் சந்தேகநபர் விசாரணைக்காக குறித்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீ ஊமையாய் இருக்கும் வரை உலகம் செவிடாய்த் தான் இருக்கும்.
>
> – சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொள்ளையர்களை அடக்க பொதுமக்கள் தயாராக வேண்டும்!

நாடு முழுவதிலும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

அதிலும் குறிப்பாக வடபுலத்தில் நாளாந்தம் நடக்கின்ற சம்பவங்களை அறியும்போது, வடக்கில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றனவா? என்று கேட்குமளவில் நிலைமை வந்துவிட்டது.

அந்தளவுக்கு போதைப் பாவனையும் வழிப்பறிக் கொள்ளையும் அடிபாடும் மலிந்துள்ளன.

இதில்வழிப்பறிக்கொள்ளையர்கள்நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர்.

இதனை உற்று நோக்கும்போது போதைப் பாவனைக்கும் வழிப்பறிக் கொள்ளைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை அவதானிக்க முடியும்.

ஆம், போதைப் பாவனைக்கு அடிமையானவர்கள் வீட்டில் பணம் கிடைக்காதபோது – வழிப்பறிக் கொள்ளையிலும் வீடு உடைத்துத் திருடுவதிலும் ஈடுபடுகின்றனர் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இதை நாம் கூறும்போது, போதைப் பாவனைக்கு அடிமையானவர்கள் மட்டும்தான் திருடுகிறார்களா என்றால் இல்லை.

உயர்ரக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் கழுத்தில் கிடந்த சங்கிலியை அறுத்தெடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முன்னிறுத்தப்பட்ட முறைப்பாட்டில் இருந்து வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடுபவர்களின் தராதரத்தை தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆக, இப்போது வழிப்பறிக் கொள்ளை என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது என்று கூறுவதே பொருத்துடையது.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் பொதுமக்கள் தமது சொத்துக்களைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

அதிலும் வீட்டில் இருந்து வெளிக்கிடும் போதும் திருமணம் போன்ற நிகழ்வுகளுக்குச் செல்லும் போதும் அம்மனுக்குச் சாத்தியது போல தங்க ஆபரணங்களை அணிந்து செல்வதைத் தவிர்ப்பது தங்க நகைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு வழி.

இதுதவிர, ஒட்டுமொத்த கொள்ளை, களவு, திருட்டு என்பவற்றைத் தடுக்க வேண்டுமாயின், பொதுமக்கள் விழிப்படைய வேண்டும்.

ஊர்தோறும் விழிப்புக்குழுக்களை அமைக்க வேண்டும்.

இதனையும் தாண்டி வீடு புகுந்த கொள்ளையர்கள் எதிர்கொள்ள – அவர்களின் தாக்குதல்களில் இருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ள, தற்பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதும் கட்டாயமானது.

அதேநேரம் இனம் தெரியாத நபர்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்கவும் வீடுகளுக்குள் நுழைபவர்களை இனங்காணவும் வீடுகள் தோறும் கண்காணிப்புக் கமராக்கள் மற்றும் ஒலி எழுப்பவல்ல கருவிகள் போன்றவற்றைப் பொருத்தி எமக்கான பாதுகாப்பைப் பலப்படுத்துவது கட்டாயமானது.

இதைவிடுத்து கொள்ளை, களவு என்பவற்றை பொலிஸார் தடுப்பர் என்று நம்பினால் நிலைமை அம்போ என்றாகிவிடும்.

# 22 ஆம் திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆதரவு

## மனோ கணேசன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

22 ஆம் திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு அளிக்க பிரதான எதிர்க்கட்சி ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக்குழு கூட்டத்தில் இம்முடிவு எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மேலும் தெரிவித்ததாவது,

இரட்டைக் குடியுரிமை கொண்டோர் பாராளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்க முடியாது. சமர்பிக்கப்பட்டுள்ள வரைபில் உள்ளதை மாற்றி, அமெரிக்க பிரஜை பசில் ராஜபக்‌ஷவின் எண்ணப்படி செயற்பட ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு நாம் ஒரு போதும் இடம்தர மாட்டோம். பசில் ராஜபக்‌ஷ அமெரிக்க காங்கிரஸில் இடம் தேடி கொள்ளட்டும். அதேவேளை பாராளுமன்றத்தை, அடுத்த வருட முதல் காலாண்டில் கலைக்க இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் தரும், "இரண்டரை வருடம்", என்ற விதி மாற்றப்படக் கூடாது. இந்நாட்டு மக்கள் இன்று, இந்த பாராளுமன்றத்தை மாற்றி, புதிய பாராளுமன்றத்தை அமைக்க விரும்புகிறார்கள். ஆகவே, இரண்டரை வருடத்தில் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் தொடர்ந்து விடப்படுவதை நாம் தந்திரோபாய நோக்கில் ஆதரிக்கிறோம். அதேவேளை, பாராளுமன்றத்தில் குறைந்தபட்சம் 113 உறுப்பினர்கள் கூடி பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு செல்ல வேண்டும் என தீர்மானித்தால், அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுக்க முடியாது. அதை அவர் ஏற்று பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு செல்ல தீர்மானிக்க வேண்டும் என நாம் நம்புகிறோம்.

ஆகவே அடுத்த வருடம் தேர்தல் மேகம் சூழும். புதிய மக்களாணையை பெற கட்சிகள் தயாராக வேண்டும். தேர்தலை சந்திக்க தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் நிலையில் இருக்கிறது. அந்நிலையை இன்னமும் மெருகூட்டும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7)

## அரசியலை புறந்தள்ளி உணவுப் பிரச்சினைக்கு

# தீர்வு காண உறுதி கொள்வோம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

சம்பிரதாய கட்சி அரசியலை புறந்தள்ளி, உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதன் மூலம் மக்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கிராமிய பொருளாதார மையங்களை வலுவூட்டும் பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறை தொடர்பில் அம்பாறை மாவட்டத்திற்கான அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதுவரை நாம் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டிருந்தாலும் எவரும் பட்டினியால் வாட அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இந்த செயற்திட்டத்தை வெற்றி கொள்வதன் மூலம் உலக உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதேவேளை அடுத்த வருடம் முதல் விவசாயம் நவீனமயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். (ம-7)

## இலங்கை கடல் கொள்ளையர்கள்

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்

(சென்னை)

இலங்கையின் கடல் கொள்ளையர்களால், இந்திய புதுச்சேரி மாநில கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதுச்சேரி, காரைக்கால் கடற்றொழிலாளர்கள் நேற்று நடுக்கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

4 படகுகளில் வந்த இலங்கையின் கடல்கொள்ளையர்களே இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதன்போது அவர்கள் புதுச்சேரி கடற்றொழிலாளர்களின் வலைகளை பறித்துச் சென்றதாக தமிழக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்கை நடுத்தர வருமானம்

# கொண்ட ஒரு நாடு

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கை ஒரு நடுத்தர வருமான நாடு என்றும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டாலும் நடுத்தர வருமானம் கொண்ட நாடாகவே உள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதாரக் கண்ணோட்டம் தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் மாநாட்டின் போது, பிரதிப் பணிப்பாளர் எனே மாரி குல்ட் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கை ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாகவே உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும், அது குறித்து மிகவும் கவலை கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்களின் துன்பங்களை, குறிப்பாக ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மிக வேகமாக செயல்பட ஆர்வமாக உள்ளதாக எனே மாரி குல்ட் தெரிவித்துள்ளார். (ம-7)

## துன்னாலையில் வீடு உடைத்து பொருட்கள் களவு

துன்னாலை கிளான் பகுதியில் வீட்டின் பின்புற கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


துன்னாலை கிளான் பகுதியில் தனித்து வாழ்ந்த பெண் பாதுகாப்பிற்காக அருகில் உள்ள வீட்டிற்கு சென்று உறங்குவது வழமை. இந்நிலையில் குறித்த வீட்டின் பின் புற கதவினை உடைத்து நீர் இறைக்கும் இயந்திரம், நீரை சூடாக்கும் இயந்திரம் உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்கள் மூலம் அரசியல் இலாபம் தேடுகிறார் ரணில்

## வாசுதேவ குற்றச்சாட்டு



(கொழும்பு)
ராஜபக்ஷர்கள் மீதான மக்களின் வெறுப்பை ஜனாதிபதி திட்டமிட்ட வகையில் தீவிரப்படுத்தி வருகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்கள் தான் காரணம் என்பதை காட்டி அதனூடாக அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார்.

அதன் ஒரு பகுதியாக பொது ஜன பெரமுனவை பலவீனப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் பலப்படுத்த அவர் முயல்கின்றார் என குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை அமைத்தோம் என வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி விரைவான தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை.

இதேவேளை மாகாண சபை தேர்தலை போன்று உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட அரசாங்கம் முயற்சிப்பதாக வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார். (4)

# அத்தியாவசியமற்ற மருந்துகள் இறக்குமதி



(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளில் பெருந்தொகையானவை மக்களின் பாவனைக்கு அத்தியாவசியமற்றவை என்றும் ஒரு மருந்து பல வர்த்தக நாமங்களில் இறக்குமதி செய்யப்படுவதால் முறையான கட்டுப்பாடுகள் இல்லாமை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய சபையின் உப குழு கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டு மக்களின் மருந்துத் தேவை மற்றும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் யாவை என்பதை அடையாளம் காண்பதற்கு கொவிட்-19 பெருந்தொற்று பரவலின் போது அமைக்கப்பட்ட உயர்மட்ட தொழில்நுட்பக் குழு ஒன்றை அமைக்க கவனம் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற குழு கூட்டத்தின் போது மேற்கண்டவாறான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வது மற்றும் விநியோகம் செய்வது தொடர்பான கொள்முதல் நடைமுறைக்கு அதிக காலம் செலவாகின்றமை மற்றும் முறையான ஒருங்கிணைப்பு இன்மை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (4)

# நாட்டில் சீரற்ற காலநிலை வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக வெள்ள அபாய எச்சரிகையை வளிமண்டலத் திணைக்களம் விடுத்துள்ளது.

அடுத்த 3 மணித்தியால ங்கள் முதல் 48 மணித்தியா லங்களுக்குள் களனி ஆற்றுப் பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளில் சிறிய அளவிலான வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக, தொம்பே, ஹோமாகம, கடுவெல, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட களனி கங்கை பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் உயரும் அபாயம் உள்ளதால் திவுல பிட்டிய, மீரிகம, அத்தனகல்ல, மஹர, கம்பஹா, மினுவாங்கொட, ஜாஎல, கட்டான மற்றும் வத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களு கங்கையை அண்மித்த பகுதிகளில் நீர்மட்டம் உயரும் அபாயம் உள்ளதால் பாலிந்த நுவர மற்றும் புலத்சிங்கள பிரதேச செயலகங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4)

# மண்சரிவில் சிக்கிய பெண் சடலமாக மீட்பு

(கொழும்பு)
வரக்காபொல - தும்பிலியத்த பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் மண்சரிவு ஏற்பட்டதில் நால்வர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று மண்மேட்டில் சிக்கியிருந்த 48 வயதுடைய பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த மண் மேட்டில் சிக்கியுள்ள மூவரைக் கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் நேற்று ஆரம்பித்தனர். (4)

# அதி சொகுசு வாகனங்கள் குறைந்த விலையில் விற்பனை

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)
குறைந்த விலையில் வாகனம் கொள்வனவு செய்வது தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

போலி ஆவணங்களை தயாரித்து செஸி இலக்கங்களை மாற்றி அதி சொகுசு வாகனங்கள் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான வாகனங்கள் பற்றிய தகவல்கள் இருந்தால் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

70 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொகுசு வாகனமொன்று 25 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பாணந்துறை பொலிஸார் மாறுவேடத்தில் சென்று செய்த விசாரணைகளில் இந்த மோசடி குறித்த தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

பாரியளவில் வாகனங்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவர் இந்த மோசடியின் பின்னணியில் இருப்பதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் ச[illegible] ஒரு சந்தேக[illegible] செய்துள்ளனர். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: சூரி 7 செவ் 3 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: BSc IT (தனியார்)<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி வைத்தியர் வேண்டாம்<br>தொ.இ: B/13038 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 1<br>கி.பா: 26 சூரி 4 செவ்.11 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தரத் தொழில்<br>தொ.இ: G/13030 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 9 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: BSc Engineer (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/13039 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: A/L (மேக்கப்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13031 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: சூரி 10 செவ் 1 இல்<br>உயரம் : 5' 3"<br>தகைமை/தொழில்: BSc (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/13040 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: சூரி 4 செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: A/L (மேக்கப்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13032 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: சூரி 8 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: HND IT,BBA வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13045 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா:சூரி 12 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>உயரம்: 5' 1"<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/13033 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

மரணமடைந்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலை சுற்று வட்ட வீதியில் நேற்று மாலை 5.40 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்தவர் வவுனியா, வெளிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தவராசா (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார். (ம-7,250)

## மோ.சைக்கிள்...

என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தந்தை குழந்தையை மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியில் இருத்தி பயணித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பெற்றோல் பாதுகாப்பு மட்டத்தை (ரிசேவ்) இடது கையினால் மாற்ற முற்பட்டபோது தடுமாறி வீதியில் தரித்து நின்ற பட்டா வாகனத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் குழந்தை மயக்கமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

சிகிச்சை பயனின்றி குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்தது.

விபத்துத் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## டிப்பர் - பேருந்து...

பேருந்துடன், பின்னால் பயணித்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

முகமாலையில் அமைந்துள்ள மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் Halo Trust நிறுவனத்திற்கு பணியாளர்களை ஏற்றி பயணித்த பேருந்து திரும்ப முற்பட்ட வேளையே விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் கிளிநொச்சி வைத்தியசாலையில் 15 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், யாழ் போதனா வைத்தியசாலையில் 17 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,18,33,60,100,315,316)

## புலிகளின்...

அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவிரவாதப் போக்குடைய தமிழ் சிங்களவர்கள் உள்ளனர் சிங்கள தீவிரவாதிகள் நான் விடுதலைப் புலிகளிற்கு ஆதரவளித்ததாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தீவிரவாதிகள் நான் விடுதலைப் புலிகளை அழித்தேன் என தெரிவித்தனர் இரண்டும் சரியான விடயமில்லை.

நாங்கள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினோம்.

ஆனால் இன்று நான் இலங்கையின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்துகின்றேன் - அதன் ஒரு பகுதியாக இருப்பது குறித்து நன்றியடைகின்றேன்.

உலகின் அழகான இடங்களில் இலங்கையும் ஒன்று. இலங்கை தனது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டும் எப்படி பொருளாதாரரீதியாக அபிவிருத்தி செய்வது குறித்தும் மாகாணங்களிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக வடமாகாணத்திற்கு, அதேவேளை தாய்மார், மனைவிமார், கணவன்மார், மகள்மார் உட்பட பலர் யுத்தத்தின் இறுதித் தருணங்களில் தங்களின் அன்புக்குரியவர்களிற்கு என்ன நடந்தது என்பதை அறிய ஆவலாக உள்ளனர்.

ஆகவே இலங்கை காணாமல் போனவர்கள் உயிரிழந்தவர்கள் குறித்து மேலதிக தகவல்களை வழங்கவேண்டும். ஆயுத மோதலின்போது காணாமல் போதல் உயிரிழப்பு என்பது சாத்தியமே.

இலங்கை இது எவ்வாறு இடம்பெற்றது, இடம்பெற்றிருக்கலாம் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

ஜனாதிபதி நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளிற்கு தீர்வை காண்பது குறித்து உறுதியாகவுள்ளார் என்பதை நான் அறிவேன். அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களையும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்த தன் காரணமாகவே சர்வதேச சமூகம் உதவி வழங்க முன்வந்தது.

என்னால் இலங்கையின் பொருளாதார சூழல் சவால்கள் குறித்து பேச முடியும், எதிர்காலத்திற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கமுடியும்,

ஆனால் ஜெனிவா வர்ணணையாளராக மாறுவதற்கு நான் முயலவில்லை, அது நான் செய்ய விரும்பாத ஒன்று என்றார். (ம-7)

## கசிப்புடன்...

கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் உயித் லியனகேவின் கீழ் இயங்கும் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு வயது-32. இந்த நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரயில்...

என்பவரே உயிரிழந்தவராவார். (ம-7,33,104)

## யாழ்...

செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபர்கள் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள மூன்று புடைவைக் கடைகளில் வேலை செய்து கொண்டு, போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்களை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## யாழில் சமகால...

டத்திற்கான மக்கள் கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

"சுபீட்சமான நாட்டிற்கான பாதை நல்லிணக்கமே" எனும் தொனிப்பொருளில் யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சமகால விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத் தலைவர் கரு ஜயசூரிய, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-7)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

## கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.**

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன்** பான்ஸி ஹவுஸ்

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)

**021 315 5900, 077 468 3354**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13140)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**



## வீடு வாடகைக்கு தேவை

வணிக நோக்கமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு 25 மாணவர்கள் பயிற்சி பெறக்கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தியேட்டர் பாணியில் உள்ள Hall, இணைந்த பாத்ரூம் வசதி,
3 அறைகள் மற்றும் வாகனம் நிறுத்துமிடம், வேலி/ மண்டபம் சரியாக மூடப்பட்டிருக்க வேண்டும். யாழ். நகருக்கு அண்மையில் இருத்தல் வேண்டும்.(5km- 7km உள்) (13123)

**076 016 5492**



## காணி விற்பனைக்கு

**யாழ். மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையிலுள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**



(13067)

தொடர்புகளுக்கு

Viber & Whatsapp

**00447479682212**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

**077 911 6983**
**076 755 8606**



**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு

**077 623 4204**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.